தரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மூ. தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 23 | பங்குனி 22 | ஜ. அவ்வல் 28 | இதழ் 53
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 4 - 4 - 81

## திருமலையில் காலரா!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் பிரதேசம் காலரா நோயினால் தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ளது அப்பிரதேசத்திலுள்ள அநேக உணவு, சிற்றுண்டிச்சாலைகளும், தேநீர் கடைகளும் இந்நோயின் காரணமாகமூடப்பட்டுள்ளன.

சென்ற மாதம் இந்தப் பகுதியில் 49 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டார்கள் என்று சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பெற்ரோல்விலை திடீர் அதிகரிப்பு!

# நாடெங்கும் ஒரு கலன் ரூ. 45-50

(கொழும்பு)

**பெற்ரோலின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விலைகள் கடந்த நள்ளிரவு முதல் அமுலுக்கு வந்துள்ளன.**

புதிய விலை அதிகரிப்பின் படி நாடு முழுவதும் ஒரு லீட்டர் பெற்ரோலின் விலை 10 ரூபாவாகவும் ஒரு கலன் பெற்ரோலின் விலை 45 ரூபா 50 சதமாகவும் இருக்கும்.

இவ்விலை அதிகரிப்புடன் பெற்ரோல் நாடெங்கும் ஒரேவிலையில் அதாவது கலன் ஒன்று 45 ரூபா 50 சதமாக விற்கப்பட வேண் டும் என்றும் பெற்ரோலியம் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. (இ)

## ரூ.21,000 அபின் பறிமுதல்; இருவருக்கு அபராதம்!

(யாழ்ப்பாணம்)

இருபத்தோராயிரம் ரூபா பெறுமதியான அபின், நேற்று முன்தினம் யாழ். நகரில் பிடிபட்டது!

இது சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டு, அபின் முழுவதும் பறிமுதல் செய்யப்பட்டு, அபராதம் விதிக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

## வயாவிளானில் மாதிரிக்கிராமம்!

(பலாலி)

கோப்பாய்த் தொகுதிக்கான மாதிரிக்கிராமம் வயாவிளானில் அமைக்கப்படவிருக்கிறது. இதற்கான அங்கீகாரத்தை அமைச்சு வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

மாதிரிக் கிராம அமைப்புக்கென வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் யாழ். பலாலி வீதியில் உள்ள காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது. இதற்குரிய பூர்வாங்க ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருவதுடன் யாழ் தேசியவீடமைப்பு அதிகார சபையின் உயர் அதிகாரிகள் காணிகளைப் பார்வையிட்டனர். (இ)

## யாழ். மாவட்ட அபிவிருத்தி: 11 அமைச்சர்கள் கவனிப்பர்

### தொகுதிவாரியான நியமன விபரம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியை கவனிக்கபதினொரு அமைச்சர்களையும் ஒரு பிரதி அமைச்சரையும் ஜனாதிபதி தொகுதி ரீதியாக நியமித்துள்ளார்.

ஒவ்வொரு அமைச்சரும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளிலுள்ள மக்களின் பிரச்சினைகள், பிரதேச அபிவிருத்தி வேலைகள் அத்துடன் ஐ. தே. கட்சி அமைப்பு வேலைகள் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டுமென ஜனாதிபதி பணித்துள்ளார்.

பின்வரும் அமைச்சர்களும் ஒரு பிரதி அமைச்சரும் பின்வரும் தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**நல்லூர்**

காணிகள், காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திசநாயக்கா.

**பருத்தித்துறை**

கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா.

**உடுப்பிட்டி**

போக்குவரத்து, போக்குவரத்து சபைகள் அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது.

**மானிப்பாய்**

கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா.

**வட்டுக்கோட்டை**

கலாச்சார அலுவல்கள் அமைச்சர் திரு. ஈ. எல். பீ. ஹுருல்லே

**கிளிநொச்சி**

விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி பிரதி அமைச்சர் திரு. சந்திரா பண்டார.

**ஊர்காவற்றுறை**

நீதி அமைச்சர் டாக்டர் நிஸங்க விஜயரத்ன.

**காங்கேசன்துறை**

கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ, உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பீ. ஹேரத்.

**கோப்பாய்**

தபால் தந்தி, மின்சக்தி அமைச்சர் திரு. டீ. பீ. விஜயதுங்க.

**யாழ்ப்பாணம்**

வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி

**சாவகச்சேரி**

கல்வி, இளைஞர் விவகார தொழில் வாய்ப்பு அமைச்சர் திரு. றனில் விக்கிரமசிங்கா, கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா இணைப்பு அமைச்சராகவும் கடமையாற்றுவர். (து-கு)

# புடவை இறக்குமதியை 82முதல் நிறுத்த அரசு முடிவு

## அமைச்சர் மெண்டிஸ் தகவல்

### அன்பளிப்புகளுக்கும் கட்டுப்பாடு விதிக்கப்படும்

(கொழும்பு)

புடவைகளின் இறக்குமதியை அடுத்த ஆண்டு முதல் முற்றாக நிறுத்துவதென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபால மென்டிஸ் தெரிவித்தார்.

கூட்டுறவு புடவை உற்பத்தி நிலையங்களின் கண்காட்சியையும் விற்பனையையும் கொழும்பு கலாபவனத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்

(8ம் பக்கம் பார்க்க)

## வரட்சி நிவாரணம்: ரூ. 100 கோடி ஒதுக்கீடு

(கொழும்பு)

வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் 100 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்திற்கமைய யாழ்ப்பாணம், வவுனியா, மாத்தளை, திருகோணமலை, புத்தளம், அம்பாறை, பொலனறுவை, முல்லைத்தீவு, கண்டி பதுளை, குருநாகல், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் 3 லட்சம் குடும்பங்

(8-ம் பக்கம் பார்க்க)

## மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞர் பலி!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சயிக்கில் விபத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த 23 வயதான அ. தயானந்தன் என்ற இளைஞர் பலியானார்.

நண்பனின் மோட்டார்ச் சைக்கிளை வாங்கிக்கொண்டு வீட்டிலிருந்து வேலைத்தலத்திற்குச் சென்றவர், வழியில் மாட்டு வண்டியுடன் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டது.

உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானார்

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். (மண். நி-கு)

BRIGHT LUBRICATION SERVICE
CHUNNAKAM



பிறைற் லூபிறிகேசன் சேவிஸ்
சுன்னாகம்.

திறப்பு விழா

6-4-81 திங்கட்கிழமை பகல் 12 மணி.

முற்றிலும் புதிய யந்திரங்கள், திறமைவாய்ந்த தொழிலாளர்கள், அதிக அமுக்க தண்ணீர் பம்புகள். இவைகளின் உதவியுடன் திறமையாக சேவிஸ் செய்ய நாடுங்கள்
பிறைற் லூபிறிகேசன் சேவிஸ்.

பெற்ரோலிய கூட்டுத்தாபன சகல எண்ணெ வகைகளும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: கெசபதி பாலசுப்பிரமணியம். (8765)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணி வியாபார ஸ்தாபனமொன்றுக்கு ஜீ. சி. ஈ. (சாதாரண) தகைமையுடன் கணக்கியல் அனுபவம், ஆங்கில அறிவுடைய எழுதுவினைஞர் தேவை ஏப்பிரல் 5-ந் திகதிக்கிடையில் அனுபவங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8750, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (8750)

பிரபல பிடவை ஸ்தாபனத்துக்கு 5வருட அனுபவமுள்ள கணக்காளர் தேவை. ஆங்கில அறிவுடைய தட்டச்சு அனுபவமிக்க ஆண் விரும்பத்தக்கது. கே. நாகமுத்து அன் சன்ஸ், 48-50, பெரியகடை, யாழ்ப்பாணம். 8760

எதிர்வரும் நவராத்திரி தினத்திற்கு நெல்லிக்கன்றுகள் தொகையாகத் தேவை. உண்டாக்கித்தர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். மில்க்வைற், யாழ்ப்பாணம். 8756

## தவறிவிட்டது

சி. சிவகடாட்சரம், நல்லூர் என்ற பெயரிலுள்ள டாக்ஸி இன்சூரன்சும், லைசென்ஸும் சென்ற 2-ம் திகதி வியாழக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து சிறீலிங்கம், கைதடி என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 8771

## விளம்பரம்

### நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கீழ்க்காணும் தகுதிகளையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் தெளிவாக எழுதப்பட்டும், நிரப்பப்பட்டும் விசேட ஆணையாளர், கிராமசபை, வேலணை என முகவரியிடப்பட்டு பதிவுத் தபால்மூலம் 15-04-1981ம் திகதிக்கு முன்னர் இச் சபைக் காரியாலயத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நடுக்கட்டல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**தகைமைகள்**

1. வயது! 20 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
2. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
3. கனிஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
4. வேலணை உதவி அரசாங்க அதிபர் பகுதிக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. தெரிவு செய்யப்படுபவர்கள் ரூபா 500/- ரொக்கப் பிணையாகச் செலுத்தல் வேண்டும்.
6. நடுக்கட்டல் உத்தியோகத்தரால் அறவிடப்படும்பணத்தின் 12% கொமிசனாக வழங்கப்படும்.

சி. பாலசுப்பிரமணியம்,
விசேட ஆணையாளர்,
கிராமசபை அலுவலகம்,
வேலணை.

வேலணை கிராமசபை
அலுவலகம்,
வேலணை,
02-04-1981. 8767

# "மனச்சாட்சியின்படி செயல்பட்டவர்!"

## அமரர் கதிரவேலுப்பிள்ளைக்கு பிரதமர் புகழ் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

"பொது மக்களுக்குச் சேவை செய்யும்போது மனச்சாட்சிப்படி நடக்க முடியாது என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் அமரர் கதிரவேலுப்பிள்ளை அப்படி நடக்கவில்லை. எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் அவர் மனச்சாட்சிப்படிதான் நடந்து கொள்வார்".

யாழ் நகரமண்டப முன்றலில் அமரர் கதிரவேலுப்பிள்ளை மறைவு குறித்து நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மேலும் கூறியதாவது: "அவரிடம் இரண்டு சிறப்பான அம்சங்களை காணக்கூடியதாக விருந்தது ஒன்று எந்தப் பிரச்னையாலும், துவேஷமனப்பான்மையுடன் நடந்து கொள்ளமாட்டார். மற்றது மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் சிந்தனையிலும், செயலிலும் நடக்கவில்லை.

**சிந்தித்துப் பேசுபவர்**

"அவர் பாராளுமன்றத்தில் பேசும் போது உள்ளத்தில் உள்ள கருத்தை மறைத்துப் பேசமாட்டார். அவர் எந்தப் பிரச்னையைப் பேசும்போதும் சிந்தித்து ஆழமாக, ஆலோசித்துப் பேசுவார். மனிதாபிமான முன்னவராக திகழ்ந்தார். மனிதாபிமானத்தை மதித்து போற்றுகிற மனிதர்களை மற்றவர்கள் மதிப்பார்கள். தாம் விரும்பும் அரசியல் கொள்கைக்கு அமைய அவர் செயலாற்றி வந்தார்.

"ஒருவர் தமது மனச்சாட்சிக்கு ஏற்ப சிந்தித்து செயல்படுவதுதான் சிறந்த பண்பு திரு கதிரவேலுப்பிள்ளை அம்மாதிரியான ஒருவராகும்.

**ஒரே கல்லூரியில் பயின்றோம்**

"நான் அவரை பாராளுமன்றம் வருமுன்னரே அறிந்திருந்தேன். அவரும் நானும் அவரது சகோதரர் திரு. அம்பலவாணரும் ஒரே கல்லூரியில் கல்வி கற்றோம். அவர் கல்வி கற்றபோது மனச்சாட்சிப்படியே நடந்து கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர் மனச்சாட்சிக்கு எதிராக ஒன்றும் கூறவில்லை, செயல்படவுமில்லை படிப்பில் மட்டுமல்ல விளையாட்டிலும் மனச்சாட்சிப்படியே நடந்துகொண்டார். அவர் பாடசாலையில் சிறந்த மாணவராக காணப்பட்டார். ஆகவே பொதுமக்கள் சேவையிலும் எவ்வித மாற்றமும் காணவில்லை. அவர் மக்கள் சேவையை சிறப்பாகவே செய்தார்" என்று கூறினர். (ஐ)

## நகரசபை பருத்தித்துறை
## ஏல விற்பனை

விடயம்! மாட்டிறைச்சிக் கடை இல. 2

குத்தகைக் காலம்! 01-05-1981 தொடக்கம் 31-12-1981 வரை.

15-04-81-ந் திகதி முற்பகல் 10-00 மணி வரை மாட்டிறைச்சிக்கடை இல. 2ல் ஏலம் கூறப்படும். 14-04-81-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ரூபா 1000/-ம் செலுத்தி ஏலம் கூறுவதற்குப் பதிந்துகொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ம. வேலும்மயிலும்,
தலைவர்,
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
25-03-1981. (8749)

## கேள்வி விளம்பரம்

### கிராமியப்பாலம் 1981 சடவன்குளம் (நயினாமடு-கரப்புக்குத்தி றோட்)

மேற்படி பால வேலைக்கான கேள்விகள் உள்ளூராட்சித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வவனியா வடக்கு, நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் கிராம அபிவிருத்திச் சபைகளிடமிருந்தும், சனசமூக நிலையங்களிடமிருந்தும் 23-04-1981 வியாழக்கிழமை காலை 10-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 150/ம் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500/ம் செலுத்துவதன் பேரில் 21-04-81 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் மேல்பற்று தெற்கு கிராமசபையில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரித்து, தபால்உறை சீல் இடப்பட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் ஒரு பிரதியை எமக்கும், மறு பிரதியை பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர், வவுனியா அவர்கட்கும் அனுப்பப்படல் வேண்டும்.

தெ. சிவராஜலிங்கம்,
விசேட ஆணையாளர்,

மேல்பற்று தெற்கு
கிராமசபை,
நயினாமடு, நெடுங்கேணி,
02-04-1981 8768

# "உள்ளத்தில் உறுதி கொண்டவர்; கொள்கைப்பற்று மிக்கவர்"

## தலைவர்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

"அமரர் கதிரவேலுப்பிள்ளையை அரசியலுக்கு இழுத்து வந்தவன் நான் தான். 59-ம் ஆண்டு அவரை ஒரு கூட்டத்திற்கு அழைத்து தமிழரசு கட்சி வாலிப முன்னணித் தலைவராக்கினோம். அன்றுமுதல் அவர் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: "நான் பல்கலைக்கழகம் சென்ற சமயம் அவர் பல்கலைக்கழகச் தமிழ்ச் சங்கத் தலைவராக இருந்தார். அவரிடம் தொடர்பு கொண்டேன். என் மூத்த அண்ணன் போல் எனக்கு புத்திமதிகள் சொல்லுவார். அவருடன் 35 ஆண்டுகளாக நான்நெருங்கிய தொடர்பு வைத்திருந்தேன். அவர் உள்ளத்தில் உறுதி கொண்டவர். கொள்கைப் பற்றுள்ளவர் அவரிடம்நிறைய படித்திருக்கிறேன்" என்றார்.

**தொண்டமான் அஞ்சலி**

அமைச்சர் எஸ். தொண்டமான் கூறியதாவது: "அமரர் கதிரவேலுப்பிள்ளையை, நான் கூட்டணித் தலைவராக இருந்தபோது நன்கு அறிந்து கொண்டேன் அவர்எந்தக்கூட்டத்திலும்ஒன்றுசேர்ந்துஆமா போடும் தலைவரல்ல. தனது மனச்சாட்சிக்கு மாறாக எதுவுமே செய்ய மாட்டார். கொள்கைக்காக உறுதியுடன் வாழ்ந்தார். கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டார். கடந்த தேர்தலின்போது நானும் திரு. அமிர்தலிங்கமும் பல கட்சித் தலைவர்களிடம் கொள்கைகளை எடுத்துக் கூறினோம். அப்போது அமரர் கதிரவேலுப்பிள்ளை கொள்கைகளை சுருக்கமாக விளங்க வைத்து அதனால் அதனை ஏற்க கூடிய சூழ்நிலை ஏற்பட்டது"

**"போட்டியிட விரும்பவில்லை"**

"கடந்த தேர்தலில் அவர் போட்டியிட விரும்பவில்லை என்பது எனக்குத் தெரியும். சில சந்தர்ப்பங்களில் அவர் இராஜினமா செய்யத் தயாராக இருந்ததும் எனக்குத் தெரியும். அவர் அரசியலில் இருந்து ஒதுங்கி சட்டத்தரணி தொழில் மூலம் நிறையச் சம்பாதித்திருக்கலாம். ஆனல் தமிழினத்திற்காக அவர் வாழவிரும்பினர். அவர் வாழ்ந்த சூழ்நிலையைப் பின்பற்றி மற்றும் தலைவர்களும் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல் கடைசிவரை காப்பாற்றவேண்டும்"

**கோப்பாய் தலைவர்கள்**

கோப்பாய்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை தலைவர் திரு. சின்னத்துரை கூறியதாவது; கோப்பாய்த் தொகுதி துரதிர்ஷ்டமுள்ள தொகுதி. அடுத்தடுத்து கொள்கைப் பிடிப்புள்ள தலைவர்களை இழந்துள்ளது. தலைவர் வன்னியசிங்கத்தை அவரது 48 வயதில் பறிகொடுத்தோம். அதன்பின் தலைவர் பாலசுந்தரத்தை இழந்தோம். தற்போது கொள்கையை இறுதிவரை விட்டுக் கொடுக்காத தலைவர் திரு. கதிரவேலுப்பிள்ளையை இழந்தோம் மூன்று தலைவர் காலத்திலும் நான்தான் கோப்பாய்த் தொகுதி தமிழரசு, கூட்டணிக் கிளைத் தலைவராக பணியாற்று

(5ம் பக்கம் பார்க்க)

## ஆதனவரி

### சங்கானைப் பட்டணசபை,

1981-ம் ஆண்டு 1-ம் காலாண்டுக்கான சோலைவரிப் பணம் செலுத்தும் முடிவுத் திகதி 30-04-1981-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை சகல வரியிறுப்பாளர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

எனவே 30-04-1981-ந் திகதிக்கு முன்னர் மேற்படி வரியைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

இராசா தணிகாசலம்,
விசேட ஆணையாளர்,
சங்கானைப் பட்டணம்,

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சங்கானைப் பட்டணம்,
சங்கானை,
1981-04-01. 8763

## மரண அறிவித்தல்

### திருமதி தர்மராசா செல்வராணி (வில்வம்)

திருமதி தர்மராசா செல்வராணி காலமானார். இவர் வடிவேலு தர்மராசா அவர்களின் அன்பு மனைவியும், பிரபல கட்டிட ஒப்பந்தக்காரர் (கொழும்பு) திரு. ச. மயில்வாகனம் அவர்களின் மூத்த புதல்வியும், சகிலா, சசிகரன், ஜினு, சுரேஷ், றமிலா, றமேஷ், றெஜிலா ஆகியோரின் அன்புத்தாயாருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 4-4-81 (இன்று) சனிக்கிழமை காலை 10 மணியளவில் 34/4, கலைமகள் வீதி, அரியாலையில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். (8764)

## நல்லை இசைவிழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லை ஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்று வரும் யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 23வது ஆண்டுத் தமிழிசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு!

மாலை 5-45 மணி: அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவர்கள் பாட்டு, வயலின். 6-30மணி செல்வி மகேஸ்வரி நாகலிங்கம் பாட்டு. செல்வி பாக்கியலட்சுமி நடராசா வயலின், செல்வன் வி. பி. கிருபாகரன் மிருதங்கம்.

7-45 மணி! திரு ப. நடேசன். பாட்டு. திரு. எஸ் சர்வேஸ்வர சர்மா வயலின், திரு: ப. சின்னராசா மிருதங்கம்.

**2 ம்நாள் நிகழ்ச்சிகள் ரத்து**

மன்றத்தின் 10 நாள்நிகழ்ச்சிகள் கடந்த 1ம் திகதி புதன் கிழமை ஆரம்பமானது. 2ம் நாளான வியாழனன்றுகோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளையின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் எதுவும்நடைபெறவில்லை. இந் நிகழ்ச்சிகள் விழா முடிவடைந்து 11ம் நாளான இம் மாதம் 11ம் திகதிசனிக்கிழமை மன்றத்தினரால் கொண்டாட விருக்கும் செட்டிநாட்டரசர் முத்தையா அண்ணாமலை செட்டியார் நூற்றாண்டு விழாவுடன் சேர்க்கப்படும்.

உலக சனத்தொகை

# 2025-ம் ஆண்டில் 830 கோடி!

நியூயோர்க் ஏப் 3. உலகத்தின் சனத்தொகை கடந்த ஆண்டில் 443 கோடியாகவிருந்துள்ளது 2025ம் ஆண்டில் உலகின் சனத்தொகை 830 கோடியாக அதிகரிக்குமென்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது

21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலக சனத்தொகை 610 கோடியாகவிருக்குமென்றும், 2010ம் ஆண்டில் அது 700 கோடியாக அதிகரிக்குமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

32 வருடங்களுக்கு முன்னர் உலகசனத்தொகை 250 கோடியாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வளர்முக நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பு விகிதாசாரம் குறைந்து வருகிறது. அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பிறப்பு விகிதம் குறைவாகவுள்ளதாக இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான், சோவியத் யூனியன், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைத் தவிர்ந்த ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆசியா ஆகிய பிராந்தியங்களிலுள்ள நாடுகளில் வருடாந்தம் 7 கோடி மக்கள் அதிகரிக்கிறார்களென்றும் உலக சனத்தொகை அதிகரிப்பில் இது 90 சதவிகிதமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த நூற்றாண்டின் முடிவில் இந்நாடுகளின் சனத்தொகை உலக சனத்தொகையில் 93 சதவிகிதமாக அதிகரிக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

21ம் நூற்றாண்டின் முதல் 25 வருட காலத்தில் உலகத்தின் சனத்தொகையில் 83 சதவிகிதத்தினர் வளர்முக நாடுகளிலேயே வசிப்பார்கள்.

தற்பொழுது வளர்முக நாடுகளில் உலகசனத்தொகையில் 74 சதவிகிதத்தினர் மட்டுமே வாழ்கிறார்களென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

2025ம் ஆண்டில் ஆபிரிக்காவின் சனத்தொகை மூன்று மடங்காக அதிகரிக்குமென்றும், தெற்காசியாவின் சனத்தொகை இருமடங்கால் அதிகரிக்குமென்றும், லத்தீன் அமெரிக்க நாடுகளின் சனத்தொகை 150 சதவிகிதத்தால் அதிகரிக்குமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் சீனாவின் சனத்தொகை 50 சதவிகிதத்திற்கும் சற்றுக்கூடுதலாகவிருக்குமென்றும் ஐ. நா ஸ்தாபன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (வெ)



தவக்கால நற்சிந்தனை

## நீர் அரசன் தானா?

சீசரின் பிரதிநிதியாகிய பிலாத்துவுக்கு முன் கிறிஸ்து நிற்கிறார். "நீ யூதர்களின் அரசனோ? என்று பிலாத்து கேட்டான். எனது அரசு இவ்வுலகைச் சார்ந்ததன்று என்று இயேசு மறுமொழி சொன்னார்.

"அப்படி யென்றால் நீ அரசனா?" என்று மீண்டும் பிலாத்து கேட்டபொழுது "நானே அரசன்" என்று அவர் நேரடியான பதிலைக் கொடுக்கவில்லை. ஏனெனில் இயேசு தம் அரசைப் பற்றி எவ்வளவோ விளக்கியும் பிலாத்துவின் செவிகளில் அது ஏறவில்லை. அவனுக்குப் புரியவில்லை. எனவே இயேசு நான் தான் அரசன் என்றால் யூதரின் குற்றச்சாட்டு உண்மையென நினைத்து அவரைத் தண்டிப்பதற்கு ஒரு காரணமாக்கிக் கொள்வான் நான் அரசன் இல்லை என்றால் அது இயேசுவின் ஞான அரசை மறுப்பது போலாகும். எனவே இயேசு "அரசன் என்று நீர் சொல்கிறீர்" என்று பதில் மொழிகிறார்.

ஆண்டவராகிய இயேசுவே நீரே எங்கள் அரசர். உம்முடைய அரசாட்சி நிலையான பொதுமையான அரசாக உண்மை வாழ்வின் அரசாக புனிதம். அருளின் அரசாக, நீதி, அன்பு அமைதியின் அரசாக எல்லா நாடுகளின் மீதும் இதயங்கள் மீதும் ஆட்சி செலுத்துவீராக.

-அருட்திரு மேரி பஸ்ரியன்

# பிரிட்டனில் ஐந்து வருடம் குடியிருந்தால் பிரஜாவுரிமை

லண்டன் ஏப் 3. பிரிட்டனில் நிறைவேற்றப் படவுள்ள புதிய பிரஜாவுரிமைச் சட்டம் இவ்வுரிமையைப் பெறத் தகுதியுள்ள வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கும் பிரிட்டனில் பூரண பிரஜாவுரிமையை வழங்குவதற்கு வகை செய்கிறது.

இதன் பிரகாரம் பிரிட்டிஷ் பிரஜாவுரிமை பெறும் உரிமை கொண்டவர்கள் ஐந்து வருடங்களுக்கு பிரிட்டனில் தொடர்ச்சியாகக் குடியிருப்பார்களேயானால் அவர்களுக்கு பிரிட்டிஷ் பிரஜாவுரிமை வழங்கப்படும். (வெ)

# "கதிரவேலுப்பிள்ளையிடம் பதவி ஆசை இருக்கவில்லை" - நெனி டி மெல்

(யாழ்ப்பாணம்)

"அமரர் கதிரவேலுப்பிள்ளை பாராளுமன்றத்திற்கு வந்து நாட்டு மக்களின் தலைவரான பின்னரும் மிகப் பணிவாகவே நடந்துவந்தார். அதிகாரவெறி பிடித்திருக்கவில்லை. பதவியாசை பிடித்திருக்கவில்லை. பண்புள்ளம் கொண்டவராக விளங்கினார்"

நிதியமைச்சர் திரு. றொனி டி. மெல் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் திரு. றொனி டி மெல் மேலும் கூறியதாவது: "என்னுடன் பல்கலைக் கழக படிப்பை முடித்துக்கொண்டு சட்டப் படிப்பைப் பெற்று சிறந்த சட்டத்தரணியாக வந்தார். அவர் அரசியலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களில் ஒருவராக விளங்கி பாராளுமன்றம் வந்தார். நான் தென்பகுதியிலிருந்து பாராளுமன்றம் வந்தேன்.

"கடைசியாக யாழ்ப்பாணம் வந்தபோது, அவர் இல்லத்திற்கு சென்று நானும் அவரும் விருந்தில் கலந்துகொண்டோம். நாட்டின் தமிழ், சிங்கள பிரச்சினைபற்றி நள்ளிரவு 12 மணிவரை உரையாடிக் கொண்டிருந்தோம். அரசியல் கட்சித் தலைவர்களில் அவர் கனிவான ஒருவர். பாராளுமன்றத்தில் சிறந்த சேவையாற்றியுள்ளார் அவர் நீண்ட பேச்சு பேசுவதில்லை. உரக்க பேசமாட்டார் மற்ற உறுப்பினர்களை திட்டி, தாக்கிப்பேசமாட்டார். மிகவும் தெளிவாக தமது கருத்துக்களை எடுத்துக் கூறுவார். அவர் மறைவு இந்நாட்டு மக்களுக்கு பெரும் நட்டமாகும். எங்களுக்குள் கருத்துவேற்றுமை இருந்தாலும் நட்புக்கு பாதகம் ஏற்படவில்லை. தமிழ்பேசும் மக்களும், சிங்களம் பேசும் மக்களும் தனிப்பட்ட முறையில் நட்பாக வாழ முற்பட்டால் நாட்டிற்கு நல்ல எதிர்காலம் உண்டு" (க)

# தாய்லாந்து நிலைமை

பாங்கொக் ஏப் 3. தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக் திடீர்ப்புரட்சியை நடத்திய இராணுவத் தலைவர்களின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்திருந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இத் திடீர்ப்புரட்சியிலீடுபட்ட துருப்புக்களை இராணுவ முகாம்களுக்கு திரும்புமாறு தாய்லாந்துப் பிரதமர் திரு. பிறேம்டின் பின்சுலானந்தா கேட்டுள்ளார்.

அதேவேளை தாய்லாந்துப் பிரதமர் திரு. பிறேம்டின் பின்சுலானந்தாவிற்கு பாங்கொக்கில் மக்களின் ஆதரவு அதிகரித்து வருகிறது

தாய்லாந்தில் இராணுவத்தினர் சில தினங்களுக்கு முன்னர் திடீர்ப்புரட்சியின் மூலம் அரசாங்கத்தைக் கவிழ்த்தது தெரிந்ததே. (வெ)

# "தன்மானம், தமிழ்ப்பற்று கொண்ட சிந்தனைச்சிற்பி"

பல்கலைக்கழக தமிழ்மன்றம் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

"மறைந்த கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தமிழ்நாட்டின் தலைநகரிலேயே தன் உயிரை இறைவனுக்கு அர்ப்பணித்து, தன் உடலை எந்தனுக்கு விட்டுச் சென்ற தன்மானம், தமிழ்ப்பற்று, தனிஆற்றல் என்பவற்றை தன்னகத்தேகொண்ட சிந்தனையின் சிற்பி என்று கற்றோர்கள் போற்றும் தலைவர்."

மேற்கண்டவாறு யாழ் பல்கலைக் கழக தமிழ்மன்றம் கோப்பாய் எம். பி. சி. கதிரவேலுப்பிள்ளையின் மறைவுகுறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

# கல்விச் சுற்றுலா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி வேதாரணீஸ்வ வித்தியாலய மாணவர்கள்சென்றவியாழக்கிழமைகல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு வட பகுதியில் பல முக்கிய இடங்களுக்குச் சென்றனர்.

கீரிமலை, பலாலி விமான நிலையம் திருநெல்வேலி விவசாயப் பாடசாலை, யாழ். வளாகம், ஈழநாடுஅலுவலகம், மில்க்வைற் தொழிலகம் உட்படப் பல முக்கிய இடங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் மேற்படி கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களும் மாணவிகளும் சென்று பார்வையிட்டனர். (இ

பூட்டோ தூக்கிலிடப்பட்ட தினத்தையொட்டி

# ஆர்ப்பாட்டம் நடத்தவிருந்த 100 பேர் கைது!

இஸ்லாமாபாத் ஏப் 3. பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டதைக் குறிக்கும் இரண்டாவது ஆண்டு தினத்தையொட்டி இன்று பாகிஸ்தானில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்தைத் தவிர்க்குமுகமாக இது வரைசுமார் 100 பேர்கராச்சியில் இராணுவ அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் அரசியல்கட்சித் தலைவர்களாவர் பாகிஸ்தான் மக்கள்கட்சி இளைஞர் பிரிவுத் தலைவர் அவர்களிலொருவராவர். (வெ)

# "அரசியல் எனக்கு ஒத்துவராது" - சி. லோகநாதன்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக்கட்சி யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் பிரபல பொருளாதார நிபுணர் திரு. சி. லோகநாதனின் பெயர் முதல்இடத்தைப் பெற்றிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகள் பற்றி அவரிடம் கேட்டோம்.

'எனது மனப்போக்கும் கொள்கையும் அரசியலுக்கு ஒத்துவராது அதனால் மேற்குறித்த அரசியல் பொறுப்பு எதையும் ஏற்றுக்கொள்ள நான் முன்நிற்கவிரும்பவில்லை என்று அவர் கூறினார்.

திரு. லோகநாதன் தமது நிலைபற்றி மேலும் விளக்குகையில்;

'உண்மையில் சொல்லப்போனால் இப்பொழுது யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா என்னோடு தொடர்பு கொண்டு ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் எனது பெயரை முதலாம் இடத்தில் சேர்ப்பதுபற்றி பேசியது வாஸ்தவம்தான் ஆனால் நான் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன்.

அரசியல் எனது தொழில் முறைகளுக்கும் மனப்போக்குக்கும் ஒத்துவராது என்பதை அமைச்சருக்கு எடுத்துக்கூறி அவரது விருப்பத்தை நிறைவேற்றமுடியாமைக்கு வருத்தமும் தெரிவித்துக்கொண்டேன் என்றார்.

# இந்தியாவுக்கு உலகவங்கி கடனுதவி

புதுடில்லி, ஏப். 3 இந்தியாவிற்கு 40 கோடி டாலரை வட்டியில்லாக் கடனாக உலகவங்கி வழங்கவுள்ளது. இந்தியாவின் உரத் தேவைகளுக்காகவே இக் கடனுதவி வழங்கப்படுகிறது.

# காமராஜர் சிலை திறப்புவிழா

சென்னை, ஏப். 3 முழுஉருவிலான காமராஜர் சிலையொன்றை ஜனதா கட்சித்தலைவர் திரு. சந்திரசேகர் இம் மாதம் 10ம் திகதி மதுரையில் திறந்துவைக்கவுள்ளார். (வெ)

# போலந்தை சோவியத் ஆக்கிரமிப்புச் செய்யாது!

சோவியத் ஆயுதப் பரிகரண நிபுணர் கருத்து

வாஷிங்டன் ஏப் 3. "போலந்து விவகாரத்தில் சோவியத் யூனியன் தலையிடாது போலந்தை சோவியத் யூனியன் ஆக்கிரமிக்கவும் மாட்டாது. போலந்து விவகாரத்தினால் ஆயுதப்பரிகரணக் கொள்கைக்கு ஆபத்து உருவாகமாட்டாது".

மேற்கண்டவாறு அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சோவியத் ஆயுதப்பரிகரணநிபுணர் திரு. முக்டரோல் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:

"சோவியத் யூனியன் போலந்தை ஆக்கிரமிக்குமென்று றீகன் நிர்வாகம் சமீபத்தில் விடுத்த எச்சரிக்கையில் எந்தவித உண்மையுமில்லை.

இப்படியான தவறான கருத்துக்களினால் கடந்த சில மாதங்களில் உலகின் ஆயுதப் பரிகரணக் கொள்கை பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆயுதப்பரிகரணக் கொள்கை பாதிக்கப்படுவதற்கு சோவியத் யூனியன் இடமளியாது.

சோவியத் - அமெரிக்க உறவு தற்பொழுது மோசமான கட்டத்திலிருக்கின்ற போதிலும் விரைவில் அது சுமுக நிலைக்குத் திரும்பக்கூடிய அறிகுறிகள் தென்படுகிறது" என்றார்.

# அபிவிருத்தி

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா மகாவலி அபிவிருத்திப் பிரதேசங்களில் துரிதமாக வேலைகள் நடைபெறச்செய்வதற்காக அபிவிருத்திசெய்த பிரதேசங்களில் குடியேற்ற வேலைகளை கவனிக்கும் பொறுப்பை மகாவலி அதிகார சபையிடமும், இயந்திர கட்டட அமைப்புவேலைகளை மகாவலி அபிவிருத்திசபையிடமும் பிரித்துவழங்க வேண்டுமென பணித்துள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (து)

# "நல்ல சிந்தனையாளர்"

(யாழ்ப்பாணம்)

"கால தேசவர்த்தமானங்களுக்கு ஏற்ப மாறுதலடையாதவர் கோப்பாய் எம். பி. அமரர் சி கதிரவேலுப்பிள்ளை எதுசெய்யத்தக்கது, எதுசெய்யத்தகாதது என்று ஆராய்ந்து அறிந்து, அதன்வழி நடந்த நல்ல சிந்தனையாளர் என்றால் மிகையாகாது அமரர் சி. கதிரவேலுப்பிள்ளை அரசியல்வாதியாயிருந்த போதிலும் ஆசைவார்த்தை கூறும் இயல்பினராகயிருக்கவில்லை. சிறந்த சட்டவல்லுனரும் சைவத்தமிழ் அறிஞருமான அமரர் கதிரவேலுப்பிள்ளை சிறந்த கல்விமான் என்றவகையில், ஆசிரியர்கள் மாணவர்கள் பிரச்சினைகளை நன்கு உணர்ந்து அவரவர் கஷ்டங்களைப் போக்க அரிதில் முயன்றார்."

மேற்கண்டவாறுஅமரர்கதிரவேலுப்பிள்ளையின் மறைவு குறித்து அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முன்னாள்செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம் வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**மணிவாக்கு**

பண்பட்டவன் தன் திறமையை விளம்பரப்படுத்துவதில்லை.

— அருள் விருந்து

# நமது நோக்கு

## சாதிப் பிரச்சினை

“யாழ்ப்பாணத்தில் சாதிப் பிரச்சினை முடிவடையுமா?” என்பது ஒரு சாதாரண கேலிக் கேள்வியாக இன்றும் இருக்கிறது. ஆனால் இந்தக் கேள்வியின் ஆழம், நீளம் அறியாதவர்களே இதை ரசிக்கின்றனர்.

சாதிப்பிரச்சினையென்றால் தீண்டாமையா; அல்லது வேளாளருக்கே தானும் காணப்படும் பல்வேறு பிரிவுகளா; அல்லது அடிமை, குடிமைபெற்று வாழும் பாகியமா; அல்லது சமபந்தி, கலப்புத்திருமணம் போன்ற முற்போக்குவாதத்துக்கு இருக்கும் தடைகளா?

ஒன்றுமே தெளிவில்லாத நிலைமையில் இப் பிரச்சினை பற்றி விவாதிப்பதும், பகிரங்க மேடைகளில் குறைகளை விரிப்பதும் அர்த்தமற்ற செயல்கள்.

அரசியல் கூட்டங்களில் இதுபற்றிக்குறிப்பிடும் கருத்துக்கள் பெருமளவில் குழப்பமானவை; தெளிவற்றவை; அரசியல்லாபம் தேடும் நோக்குடையவை.

அண்மையில் கூட்டணி நடத்திய கிராமயாத்திரையில், சமபந்தி பற்றி கிண்டல்செய்தவர் பலர். இன்று நாம் இங்கு ஒருங்கிருந்து உண்ணுகின்றோம்; நாளை நம் அயலவர்கள், ஊரவர்கள் இவ்வாறு நடக்கமுடியாதநிலையில் இது ஒரு மக்களைப் பேக்காட்டும் நாடகமல்லவா? என்று கூறுபவர் இன்றும் பலர் இருக்கின்றனர்; சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் இவ்வித சமபந்தி நடத்தமுன்வந்தபோது கூட்ட மண்டபம்-கிடுகால் வேயப்பட்ட அழகான கொட்டகைப்பந்தல்-அக்கினிக்கிரையாகியதை இவர்கள் அறியார். நெருப்பு சுவாலித்தெழுந்தபோது வாழ்வின் அநித்தியம் கண்முன் தோன்றிற்று.

யாழ்ப்பாணத்திலேமட்டுமல்ல, மகாத்மாகாந்தி பிறந்த குஜராத் மாநிலத்திலேயே அந்த மகான் ஆற்றிய மகத்தான சேவையை மறந்து சாதிக்கலவரங்கள் மூலம் மக்களைப் பலியெடுக்குமளவில் பெருத்திருக்கின்றன. பிரதமர் இந்திராகாந்திக்கு இதனிலும் பார்க்கப் பெருத்த தலைவலி உள்நாட்டுவிவகாரங்களில்வேறு எதுவுமில்லையெனலாம்.

மனித தொடர்புகள் மனிதாபிமானம், ஒரு விஞ்ஞானரீதியில் தொழிற்படும் சரக்கல்லவென்பது முக்கியமான உண்மை! யாழ்ப்பாணத்தில் இன்று 50 ஆண்டுகளுக்குப் பின் நாம் இந்தச் சாபக்கேட்டை அகற்றும்பணியில் திருப்திபட முன்னேறிவருகின்றோம். ஆயினும் இன்னும் நெடுந்தூரம்போகவிருக்கிறது.

இப் பயணத்தைத் தொடர்ந்து பயனடைய இரண்டு கருத்துக்களை மனதிற்கொள்வது நலம். ஒன்று தீண்டாமையை முற்றாக ஒழித்து நாமெல்லோரும் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தபோதும் ஒரே சமூகத்தவர்என்ற நோக்கை வளர்த்தல். இரண்டாவது மிகமுக்கியமானது; சிறுபான்மையர் ஒரு தனிஇனமென நிரந்தரப்படுத்தி அவர்களின் விமோசனத்துக்கு உழைப்பதாகத் தம் கட்சியின் பலத்தையும் தலைவர்களின் செல்வாக்கையும்வளர்க்கும் முயற்சிக்கும் முற்றுப்புள்ளி வைத்தல்.

முந்தியது சட்டத்தாலும் பொதுநல உணர்வாலும் வளர வளர பிற்றியது சூரியனைக்கண்டபனிபோல் நீங்கும்; ஆயினும் இது இலகுவானமாற்றமென மனப்பால் குடித்தல் மடைமை.

## சங்கு சுட்டாலும்...

இம்மாதம் 13ம் தேதி ஸ்ரீலங்கா கம்மியூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க தமது 80ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறாரென்பது செய்தி.

இத்தினம் இலங்கைவாழ் தமிழ், சிங்கள மக்கள் அனைவருக்கும் ஒரு சிறந்ததினம்-புத்தாண்டுத்தினம்.

இந்த இருபெரும் சமூகங்களும் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டுமென்று தமது அரசியல் தலைமையாலும், தமது கட்சியின் நோக்காலும், அதற்கும் மேலாக தமது அளப்பரிய மனிதாபிமானத்தாலும் பிரசித்தி பெற்றவர் டாக்டர் விக்கிரமசிங்க.

பரோபகாரம் அவருடைய இரத்தத்தில் என்றும் ஊற்றெடுக்கும் பண்டமென்பதை இந்த நாட்டில் உள்ள எம்மதத்தவரும், எந்த இனத்தவரும், எந்த அரசியல் கட்சியும் ஒப்புக்கொள்ளும்.

அரசியல் வாழ்க்கை ஆறுபோல் பெருகும், வற்றும், தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம், பல்லாண்டுகளாக பல இன்னல்களுக்கிடையே பொதுநல வாழ்வில் தளம்பாத பணிபுரிந்துவரும் டாக்டரை நீடூழி வாழ்கவென்று வாழ்த்துவதில் மகிழ்ச்சி, சங்குசுட்டாலும் வெண்மைதரும்.

## மக்கள் வங்கியின் புதிய பணிப்பாளர் சபை

(கொழும்பு)

மக்கள்வங்கியின் புதிய பணிப்பாளர் சபைத்தலைவராக மத்திவங்கியின் பொருளாதாரஆராய்ச்சித்துறைப்பணிப்பாளர் கலாநிதி எச். ஏ. டி பெர்ணாண்டோ, நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. றொனி டிமெல்லினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. டி. மகாதேவா, திரு. அஜித்ஜெயரட்ண, திரு. கில்பேர்ட் ஜெயசூரியா ஆகியோர் இச்சபைக்கு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஏனையபணிப்பாளர்களாவர்.

மக்கள்வங்கிக்குச் சொந்தமான 79 லட்சம்ரூபா பணம் நீர்வேலியில் கொள்ளையடிக்கப்பட்டதைத்தொடர்ந்து மக்கள்வங்கியின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் அனைவரும் நேற்று முன்தினம் ராஜினாமாசெய்தது தெரிந்ததே. (வெ)

தொண்டைமானாறில்மற்றொருகருத்தரங்கு:

# கிராம வளங்களும் வேண்டிய அபிவிருத்திகளும்

(இலங்கையின் கிராமிய சமுதாய அபிவிருத்திக்கான திறமுறைகள் பற்றிய கருத்தரங்கு இம்மாதம் 6-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதி வரை தொண்டைமானாறு வெளிக்கள ஆய்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது. மன்றக்கல்லூரியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறையும் இணைந்து இதனை நடாத்துகின்றன. இதனையொட்டி இந்தக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது. ஆ-ர்)

இன்றைய தேவை நமது நாட்டில் காணப்படும் மூலவளங்கள் அவை இயற்கைவளமாக இருந்தாலும் சரி, மனிதவளமாக இருந்தாலும் சரி சிறப்பாகப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதாகும். இந்தப் பயன்பாடு நாட்டின் அபிவிருத்தியைத் துரித நடையில் இட்டுச்செல்ல வேண்டும். அரசாங்கத்தின் செயல்முறைகளைமட்டும் எதிர்பார்க்காமல் நாட்டில் பல் கலைக்கழகங்களும் இதர கல்விக்கழகங்களும் இத்துறையில் பெரும் பணியாற்ற வேண்டும். இந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்துறை குறிப்பிடத்தக்க அளவு செயலாற்றி வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மிகக்குறுகியகால வரலாறு கொண்டது. இக்குறுகிய காலத்துக்குள் அமரர் பேராசிரியர் சோ. செல்வநாயகத்தின் தலைமையின் கீழ் புவியியற்பகுதி வேகமாக விருத்தியடைந்தது. இந்தக் காலத்தில் தென்மராட்சிப் பகுதியின் சமூக சேவை அபிவிருத்தி பற்றியும் எதிர்காலத்திட்டங்கள் பற்றியும் 1978 79-ம் ஆண்டுகளில் ஆராய்ச்சி நடத்தியது. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் தெரிவு நோக்கில் பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன இறுதியில் ஓர் அடிப்படைத் திட்ட விளக்கமும் வெளியிடப்பட்டது இதனை எவரும் மறந்திருக்க மாட்டார்கள் எனலாம். பின்பு பேராசிரியரின் அகாலமறைவின்பின் பேராசிரியர் ஹூல ஜெயசிங்கத்தின் தலைமையின் கீழ் இத்திட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டது. இதே ரீதியில் இன்னொரு ஆராய்ச்சிக் கருத்தரங்கு இம்மாதம் ஏப்ரல் 6-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதிவரை தொண்டமானாறு வெளிக்கள ஆய்வுநிலையத்தில் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இக்கருத்தரங்கு எமது புவியியற் பகுதியின் வரலாற்றில்ஒரு திருப்புமுனை எனக்கொள்ளலாம்.

இலங்கையிற் கிராமங்களில் வாழுகின்ற மக்களுக்கு விமோசனமளிக்கும் வகையில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. அதாவது இலங்கையிற் கிராமியசமுதாய அபிவிருத்திக்கான திறமுறைகள் பற்றி ஆராய்வதற்காக இக்கருத்தரங்கு நடைபெறுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்பகுதியும் இலங்கை மன்றக்கல்லூரியும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்துவதால் அரிய ஆராய்ச்சி உண்மைகள் இக்கருத்தரங்கில் பெறப்படும் என நாம் எதிர்பார்க்கலாம், மறைந்த பேராசிரியர் சோ. செல்வநாயகத்தின் பின் அண்மையில் புவியியற் பேராசிரியராகப் பொறுப்பேற்றிருப்பவரும், அமரரின் மாணவருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இதனைத் தமது முதலாவது முயற்சியாக மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற் பகுதியின் பெரும் முயற்சியான இதில் இரண்டாம முறையாக பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும், மாணவர்களும் ஒருங்கிணைந்து ஒரு வாரத் தொடர் கருத்தரங்காக இதனை நடத்துகிறார்கள் முக்கியமாக இலங்கையில் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? இம்மக்கள் வாழும் நிலம் அவர்களால் உண்மையிலேயே அனுபவிக்கப்படுகின்றதா? நிலம்கொண்டுள்ள மண்ணின் வகைக்கு ஏற்ப பயிர் செய்கின்றார்களா? அம்படியில்லாவிடில் எப்படியான பயிரிடல் முறையை இவர்கள் பின்பற்ற வேண்டும்? பயிர்ச்செய்கைக்கும், கால நிலைக்கும், நீருக்கும், மண்ணுக்கும் உள்ள தொடர்பு மக்களின் பயிர்ச்செய்கை நடவடிக்கையைப் பொறுத்தவரையில் பேணப்படுகின்றதா? இன்னோரன்ன விஷயங்கள் இங்கு ஆராயப்படும். அதுமட்டுமல்லாமல் கிராம மக்களிடையேயுள்ள ஆட்பலம், அல்லது மனிதவலு செம்மையான முறையில் நாட்டுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றதா! கிராம சமுதாய நிலையில் இவர்களின் வருமானம், வாழ்க்கைச் செலவைக்கொண்டு செல்கின்றதா? சமூக வாழ்க்கையில் கிராம மக்கள் அன்றாடம் சந்தோஷமாக வாழ்கின்றார்

(5-ம் பக்கம் பார்க்க

செ. பாலச்சந்திரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற் பகுதி,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்)

## தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி முன்னேற....

இன்று பாடசாலை மாணவர்களுக்குச் சில இலவசப் பாடநூல்கள் ஒரு தவணை முடிந்தும் விநியோகிக்கப்படவில்லை. தமிழ்ப் பாடசாலைகளில்-யாழ் மாவட்டத்தில் 1,200 க்கு மேல் ஆசிரியர்கள் தேவை எனப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் கல்வி மந்திரிக்கும் அரசுக்கும் பல தடவைகள் எடுத்துக்காட்டியும் 1981 ம் ஆண்டு மாணவர் கல்வியில் ஒரு தவணை முடிந்தும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இதனால் மாணவர் கல்வி கேலிக்கிடமாகியிருப்பதுடன், கேள்விக்கிடமாகியுமுள்ளது. புதிய

## மக்கள் கருத்து

நியமனங்கள் இல்லாதவரை பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழிற் சங்கங்கள் குரல் கொடுத்தாலும், வெளிமாவட்ட ஆசிரியர்கள் தத்தமது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்று வருவது ‘நெருப்பாற்றில் மயிர்ப்பாலம்’ போட்ட கதையாகத்தானிருக்கும்.

விலைவாசி ஏற்றத்தின் கனை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் ‘பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த’ சங்கதியாக இருக்கின்றது. இந்த நிலையில் வெளிமாவட்ட ஆசிரியர்கள் சொந்த மாவட்டங்களுக்கு வராதவரை, மனவிரக்தியுடனும் பணக் கஷ்டத்துடனும் தான் வாழ முடியுமே தவிர, அந்த மாணவர்களுக்கும் தக்க பயனடைய முடியாதுபோய் விடும்.

1980-ம் ஆண்டில் மாற்றம் கிடைக்கும் என ‘இலவு காத்த கிளி’ கதை படித்த ஆசிரியர்கள் 1981-ம் ஆண்டும் முதலாம் தவணையைக் கடக்கிறார்கள். இந்த ஆசிரியர்களை இடமாற்றம் செய்தால், வெளிமாவட்டத் தமிழ்ப் பாடசாலைகளை மூடவேண்டியிருக்குமென முணுமுணுப்பதால், பிரச்னை தீரப்போவதில்லை.

நாடெங்கும் போதிய ஆசிரியர்களை நியமித்து, மாணவர் கல்விக்கும் ஆசிரியர் மன நிம்மதிக்கும் வழிவகுக்காதவரை கல்வி உயர்வை எதிர்பார்க்க முடியாது.

ஐ. தே. கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர், முறையான ஆசிரியர் நியமனம் நடக்கவில்லை நேர்முகப் பரீட்சைகள் முடிந்தும் பதவி உயர்வுகள் கிடைக்கவில்லை- வெளிமாவட்ட ஆசிரியர், சொந்த மாவட்டங்களுக்கு ஒரு திட்டத்தின் அடிப்படையில் மாற்றப்படவில்லை.

அபிவிருத்திச் சபைத் தேர்தலைவிட, மாணவர் கல்வி மிக முக்கியமானதாகும். இதற்கு முதலில் ஒரு தீர்வு காணக் கல்விமான்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு ஆலோசனை வழங்குவார்களா?

புத்தொளி
ஆனைக்கோட்டை

## அன்று நடந்தது இன்று நடப்பது

### இரத்தத்தால் எழுதிய விண்ணப்பப் பத்திரங்கள்

வேலையற்ற இளைஞர்களின் பிரச்னை உலக நாடுகளுக்குப் பொதுவானதாகும்.

ஜப்பான் நாட்டில் டோக்கியோ நகரில் மட்டும் கல்லூரிகளிலிருந்தும் பல்கலைக்கழகங்களிலிருந்தும் வெளியேறிய பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தொழில் பெறுவதற்கு பெரும் இடர் பட்டனர்.

றெயில்வேதுறை உத்தியோகத்திற்கு இவர்கள் அதிக அளவில் நாட்டஞ்செலுத்தினர். 1932-ம் ஆண்டில் இத்துறையில் 1200 வெற்றிடங்கள் காணப்படலாயிற்று.

ஆனால் அதற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் ஐயாயிரத்திற்கு மேற்பட்டிருந்தன.

இந்த விண்ணப்பங்களில் எட்டுப் பேர்களது விண்ணப்பங்கள் இரத்தத்தினால் எழுதப்பட்டிருந்தன.

அதிகாரிகளின் கவனத்தையும் அனுதாபத்தையும பெறுவதற்காகவே இவ்வாறு இரத்தத்தால் எழுதப்பட்டு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தன.

— வி. கே. நவசோதி.

புதியவர்கள் நியமிக்கப்பட்டதால்

# வேலைநிறுத்தக்காரருக்கு

## வேலைவழங்கமுடியாதுள்ளது!

### தூதுக்குழுவிடம் மாவட்ட அமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியவர்களின் இடங்கள் நிரப்பப்பட்டுள்ளதால் வேலைநிறுத்தத்தால் வேலை இழந்தவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது"-

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சர் திரு யு பி விஜயக்கோன் தன்னைச்சந்தித்த 1980ம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த பொது வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதால் பாதிக்கப்பட்டோர் சங்கக் குழுவினரிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்பு யாழ் மாவட்ட அமைச்சரின் செயலகத்தில் நடைபெற்றது.

மேற்படி சங்கத்தின் சார்பில் கலந்துகொண்ட குழுவினர் அமைச்சரிடம் வேலைநிறுத்தத்தில் பங்குபற்றும்படி வற்புறுத்திய தாய்ச்சங்கமோ; நிவாரணம் அளிக்கப்படும் என்று உறுதியளித்த அரசாங்கமோ இன்று ஒன்பது மாதங்கள் முடிந்தும் எதுவும் செய்யவில்லை அநாதரவாக பல தொழிலாளர் விடப்பட்டுள்ளதுடன் குடும்பங்கள் மிகவும் கஷ்டநிலையில் இருக்கின்றது. ஆதலால் இவர்கள் செய்தது பிழையோ? சரியோ? இவர்களின் நிலையை மனிதாபிமானத்துடன் அணுகி பாதிக்கப்பட்டோர் அனைவரையும் புதுவருடத்துக்கு முன் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டனர்.

மாவட்ட மந்திரி அளித்த பதிலைத் தொடர்ந்து நிவர்த்தி செய்யமுடியாதபட்சத்தில் தங்களை ஓய்வுபெறச் செய்வதற்காகுதல நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

மாவட்ட அமைச்சர் விபரமாக அறிக்கை தயாரித்து தந்தால் அதை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தனவுக்கு சிபாரிசுசெய்து அனுப்புவதாக உறுதியளித்தார்.

சங்கத்தின் சார்பில் திரு. ரி நமசிவாயம், தலைமையில் சென்ற குழுவில் திரு. வி எஸ் கனகரத்தினம், திரு. வி. செல்வநாயகம், திரு. எஸ். தனபாலசிங்கம் ஆகியோர் சென்றிருந்தனர். (கி-கு)

## கிராம..

[4ம் பக்கத் தொடர்ச்சி]

களா? அரசியல், சமூக, சமய இனப்பூசல்கள் உண்டா? அப்படியாயின் அவற்றுக்கு அடிப்படையான காரணம் என்ன? எந்த வகையில் அவற்றுக்குப் பரிகாரம் காண முயற்சிக்கலாம்? என்பன பற்றியும் நாட்டின் கனிப் பொருள்வள (Miueral resources) அடிப்படையில் எந்த வகையான கைத்தொழில்களை இன்னும் உருவாக்கலாம்? தொழிலாளர் தொகை எங்கு காணப்படுகின்றது? அமைக்கப்பட்ட கைத்தொழில்கள் ஏற்ற அமைவைக் கொண்டுள்ளதா? நாட்டின் குடித்தொகையைப் பொறுத்த வரையில் கிராமியக் குடித்தொகைக்கு வேறு விசேட சனங்கள் உண்டா? ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத் திட்டங்கள், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவை சிறந்த முறையில் பயனளிக்கின்றனவா? மக்களின் இடப்பெயர்வு நாட்டின் கைத்தொழில், பயிர்ச்செய்கை முன்னேற்றத்துக்கு முக்கியமானதா? எப்பகுதி மக்கள் இடப்பெயர்வை விரும்புகிறார்களா? என்பன பற்றியும் இக்கருத்தரங்கில் ஆராயப்படும்.

மேலும் பணவீக்கம் எந்தளவுக்கு கிராமமக்களைப்பாதித்துள்ளது கிராமிய மக்களின் வருமானமும் வாழ்க்கைச் செலவும் வாழ்க்கைத் தரமும் எந்தளவுக்கு நகரமக்களில் இருந்து வேறுபடுகின்றது. எந்தளவுக்கு கிராமிய மக்களின் உணவு புரதச் சத்தைக் கொண்டுள்ளது. எப்பகுதிகள் போஷாக்குப் பற்றாக்குறையைக் கொண்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் என்ன தீர்வுகள் சிபார்சு செய்யப்படலாம் என்பன பற்றியும் இங்கு ஆராயப்படும்.

சுண்டிக்குளம் கொலை வழக்கு:

## சாட்சிக்கு மயக்கநிலை; விசாரணை இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளம் கொலை வழக்கில் 1-ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் (ஜூனியர்) குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தபோது சாட்சியான வே. அம்பலவாணர் மயக்கநிலை அடைந்ததால் விசாரணை 15 நிமிடம் இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

இவ்வழக்கு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சுண்டிக்குளத்தில் 1978 மே 13ம் தேதி ஈ. ஏ. ஆனந்தராசா, ஜெயரூபன் ஆகியோர் சுந்தரதேவரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜீ. பொன்னம்பலம் (ஜூனியர்) 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம், சட்டத்தரணி செல்வி அபிமன்னசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினார்.

சாட்சியமளித்த வே. அம்பலவாணரை, 1-ம் எதிரியின் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) நேற்று குறுக்கு விசாரணை செய்தார். அப்போது சாட்சி வாந்தி வருவதாகவும், ஆறுதல் எடுக்கப் போவதாகவும் தெரிவித்து தண்ணீர் வேண்டும் எனக் கேட்டார் உடனடியாக சாட்சி கூண்டிலிருந்த அவர் கீழ இறங்கி அருகிலிருந்த கதிரையில் அமர்ந்தார். தண்ணீர் வழங்கப்பட்டது. மீண்டும் தண்ணீர் தருமாறு கேட்டார். இதனால் விசாரணை 15 நிமிடம் இடைநிறுத்தப்பட்டது.

15 நிமிடத்தின் பின் சாட்சி தமக்கு சாட்சிக் கூண்டில் நின்று சாட்சியமளிக்க முடியும் என தெரிவித்ததைத் தொடர்ந்து விசாரணை ஆரம்பமானது. (க)

## பரு. குடிநீர்த்திட்டவேலைகள் இம்மாதமே ஆரம்பிக்கப்படும்

(பச்சிலைப்பள்ளி)

அமெரிக்க அரசாங்கத்தின் உதவியுடன் பருத்தித்துறையில் ஆரம்பிக்கப்படவுள்ள குடிநீர் விநியோகத் திட்ட வேலைகள் இம்மாதத்தில் ஆரம்பமாகவுள்ளன.

பருத்தித்துறை நகரத்திற்குத் தேவையான நீர் இத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நகரத்திலிருந்து ஆறு மைல்கள் தொலைவிலுள்ள மணற்காடு என்னுமிடத்திலிருந்தே பெறப்படும்.

இந்நீரை பெறுவதற்காக மணற்காட்டில் 22 கிணறுகள் வெட்டப்படவுள்ளன. இக் கிணறுகளிலிருந்து பெறப்படும் நீர் அங்கு கட்டப்படவுள்ள நீர்த் தாங்கியில் சேகரிக்கப்பட்டு பின்பு 4 பாரிய குழாய்கள்மூலம் பருத்தித்துறை நகருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இக் குடிநீர் விநியோகத் திட்டத்திற்குத் தேவையான உபகரணங்களும் அமெரிக்காவிலிருந்தே தருவிக்கப்படவுள்ளன. தொழிலாளர்கள் மட்டும் இங்கிருந்து சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இவ்வேலைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் மணற் காட்டிலிருந்து மணல் எடுக்கப்படுவது முற்றாகத் தடை செய்யப்படும். (அ)

# றீகன் உடல்நிலை

## மேலும் அபிவிருத்தி

வாஷிங்டன், ஏப்ரல். 3

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான அமெரிக்கஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனின் உடல்நிலை சீரடைந்து வருவதாக அவருக்கு சிகிச்சை அளித்துவரும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்

றீகன் ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகவைத்தியசாலை அறையிலிருந்து தமது வழமையான அலுவல்களை நேற்றுகவனித்துவந்தார்.

றீகனின் பத்திரிகைச்செயலாளர் திரு. ஜேம்ஸ்பிரய்டின் தேகநிலையும் சீரடைந்துவருவதாகவைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இவரைப் படுகொலைசெய்யஎடுத்த முயற்சியின் போது இவரின் தலையில் துப்பாக்கி ரவைஒன்று துளைத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இத்துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்டுள்ள ஜோன்ஹிங்லி மனநோயினால் பீடிக்கப்பட்டுள்ளார். இதனால் இவரைப் பூர்வாங்க விசாரணைக்குட்படுத்த முடியாதுள்ளதாகக் கூறப்பட்டது.

வட கரோலினாவிலுள்ள சிறைச்சாலைவைத்திய சாலையொன்றிற்கு இவர் வைத்திய பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். (வெ)

மன்னார் - வெளியூர்

## மீனவர் பிரச்னைதொடர்பான விசாரணை ஒத்திவைப்பு

(மன்னார்)

தலைமன்னார் மீனவர்களுக்கும் வெளியூர் மீனவர்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறு தொடர்பான விசாரணை இம்மாதம் 24-ம், 25-ம், 2-ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

கடற்தொழில் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் திரு. முத்தையா இவ்விசாரணைகளை நடத்திவருகிறார்.

முன்னர் நடைபெற்ற விசாரணையில் மன்னார் மாவட்ட மீனவர்களுக்காக பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், மன்னார் எம். பி. திரு பி எஸ். சூசைதாசன், சட்டத்தரணிகள் திரு. புதுமைநாயகம், திரு சந்திரகாசன், திரு கயஸ்பெல்டானோ ஆகியோர் ஆஜராகினர். வெளியூர் மீனவர்கள் சார்பில் திரு. டன்ஸ்டன் கொறேரா ஆஜரானார்.

விசாரணைகள் மன்னார் கடல் தொழில் காரியாலயத்தில் நடைபெற்றன. (அ)

## உள்ளத்தில் உறுதி ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறேன்.

### நல்லூர் 'சிவா' அஞ்சலி

நல்லூர் எம். பி திரு எம் சிவசிதம்பரம் கூறியதாவது: "இயக்கத்தின் சிறந்த ஒரு தலைவரையும், இனத்தின் உயர்ந்த தலைவரையும், எமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்த நண்பனையும் இழந்து தவிக்கின்றோம் 25 வருடகாலமாக நெருங்கிப் பழகியிருக்கின்றேன். தன்வாழ்நாள் முழுவதும் இனத்தின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டார். கூடப்பிறக்காவிட்டாலும், சொந்தச் சகோதரன்போல நெருங்கிப் பழகினார் நான் கண்ட அரசியல் வாதிகளில் அவர் எதிரிகளை மதிக்கும் பண்பை கொண்டிருந்தார்.

"60-ம் ஆண்டு தலைவர் திரு. ஜி ஜி பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டபோது, அவருடன் தமிழரசுக் கட்சிசார்பில் போட்டியிட்ட திரு. கதிரவேலுபிள்ளை, தலைவர் ஜி ஜி இல்லம்சென்று தானும் போட்டியிட இருப்பதாக நேரில்கூறி அதனை ஏற்றுக்கொள்ளும்படி சென்றார்.

"அவரின் மனைவி, பிள்ளைகள் மட்டும் இன்று அழவில்லை அவர்களுடன் தமிழினம் முழுவதும் சேர்ந்து கலங்குகிறது. அவர் விட்டுச்சென்ற இலட்சியத்தை நிறைவேற்றுவோம். அவர் கனவை நனவாக்குவோம். அதுவே அவருக்கு செய்யும் கைமாறாகும்.

### யாழ். மேயர் அஞ்சலி

ஈழ் முதல்வர் திரு இராஜா விஸ்வநாதன் தலைமையுரையில் கூறியதாவது; "அமரர் கதிரவேலுப்பிள்ளை தமது உடல் பொருள் ஆவி அத்தனையும் தமிழ் இன விடுதலைக்கே அர்ப்பணித்தார் அவரின் இறுதிமூச்சு வரை தமிழ் ஈழம் அமைக்க பாடுபட்டார். எங்கள் மாநகர சபை வழக்குகளில் இலவசமாக ஆலோசனை வழங்கிவந்தார். அவர் ஒரு சிந்தனை சிற்பி, செயல் வீரன், பட்டதாரி, சிறந்த சட்டத்தரணி அவர் பணியை தொடர்ந்துசெய்து அவரின் லட்சியத்தை நிறைவேற்றுவதே அவருக்கு செய்யும் கைமாறாகும்"

### சந்திரகாசன் இரங்கலுரை

சட்டத்தரணி சி. சந்திரகாசன் கூறியதாவது: "மனித இனத்திற்காக மனிதன் ஆற்றக்கூடிய மிகப் பெரும் சேவை இனத்திற்காக போராடி உயிரைக்கொடுப்பதுதான். தலைவர் கதிரவேலு பிள்ளை இந்தியா செல்லுமுன்னர் கடைசியாக என்னை அழைத்து தனக்கு இடர் நேரிடலாம் என்று கூறினார் "ஆனாலும்தமிழினத்தின் விமோசனத்திற்காக இந்தியா போகப்போகிறேன்" என்றார். கடமை உணர்ச்சி மிக்க, கொள்கைப் பற்று மிக்க தலைவர் அவர் தன் குடும்பத்திற்காக மட்டும் வாழக்கருதியிருந்தால் நோய்வாய்ப்பட்ட நிலையில் இந்தியா போகாமல் விட்டிருக்கலாம் அவர் சென்ற பயணத்தின் போது மனைவியை அழைத்துச் செல்லக்கூடிய சந்தர்ப்பம் இல்லை பிள்ளைகளை அழைத்து செல்ல முடியாத நிலை கடைசியில் போவது என்று முடிவு எடுத்தார்.

"சுகம் பலம் உள்ள தலைவர்கள் செய்யத் தவறியவற்றை அவர் செய்யத்துணிந்தார். அவர் தன்னால் இயன்றவைச் செய்தார் ஒருமனிதன் செய்யும் ஆகப்பெரிய தியாகம் உயிரைக் கொடுப்பதுதான். அவரை தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டது. காரணத்தை உணர்ந்தகாரணத்தினால் அவர் செல்ல நேர்ந்தது. லட்சோபலட்சம் தமிழ்பேசும் மக்களின் லட்சியமான 'தமிழ் ஈழம்' அமைக்கப்படும்வரை அவர் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருப்பார்.

### இரா சம்பந்தன் அஞ்சலி

திருமலை எம் பி திரு. இரா சம்பந்தன் கூறியதாவது: "அமரர் கதிரவேலுப்பிள்ளை நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி அதிகம் பேசுவதில்லை. அவர் ஒரு செயல் வீரர். அவர் பேசினால் அதில் சிந்தனை தூண்டுவதாக இருக்கும் அவர் இந்தியா செல்வதற்கு முன்பாக ஒன்றுகச் சேர்ந்து உரையாடினோம். அவர் தமிழினத்திற்காக பல திட்டங்களைத் தெரிவித்தார்"

### கணேசலிங்கம் பேச்சு

பட்டிருப்பு எம். பி. திரு. கணேசலிங்கம் கூறியதாவது: அவர் கடைசி மூச்சுவரை தமிழ் ஈழத்திற்காக உழைத்தார். சின்னஞ்சிறுமையைப் பொறுத்தவரை எங்கள் மத்தியில் கருத்து வேறுபாடு இருந்தாலும் இயக்கத்தின் நன்மைக்காக எடுக்கப்படும் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடப்பார். அரசியல் பண்பாடுள்ள சிரேஷ்ட தலைவர். அவர் தமிழினத்தின் விடுதலைக்காக அயராது உழைத்தார்"

## அண்ணன் கண்டித்ததினால் தம்பி தற்கொலை

(பச்சிலைப்பள்ளி)

அண்ணன் கண்டிப்பைப் பொறுக்கமுடியாத தம்பி நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

பளைப் பகுதியிலுள்ள வண்ணான் கேணி என்னுமிடத்தைச் சேர்ந்த திரு க. பாலசிங்கம் (வயது 22) என்ற இளைஞரே தற்கொலைசெய்துகொண்டவராவார்

இறந்தவர் மிளகாய்ச் செடிகளுக்கு நீர் ஊற்றவில்லை என மூத்த சகோதரர் அவரைக் கண்டித்தாராம். இதனால் ஆத்திரமடைந்தவர் கிருமிநாசினியை அருந்தி தற்கொலைசெய்துகொண்டதாக இறந்தவரின் மரணவிசாரணையின்போது தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி விசாரணைநடத்தித் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. கே. தங்கவடிவேல் சாட்சியங்களை ஆஜர்செய்தார்.

### முன்னுரிமை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொகுதியிலுள்ள சத்துருகொண்டான் என்னுமிடத்தில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள படித்த மகளிர் பண்ணை விஸ்தரிக்கப்படும்போது சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த படித்த யுவதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படவுள்ளது.

# பெண்கள் நலன்களை கவனிக்க தனிஅமைச்சு!

## இந்தோனேஷியா சென்று திரும்பியவர்தரும்தகவல்கள்

(நமது புலோலி நிருபர் திருச்செல்வம்)

இந்தோனேஷியாவில் வாழுகின்ற மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற போதிலும் பல்வேறு கலாசாரங்களை அனுசரிக்கின்ற போதிலும் அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டுடனும், நாட்டுப்பற்றுடனும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றார்கள்.''

இவ்வாறு விவசாயத் தகவல்கள் பற்றி ஆராய்வதற்காக தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் இந்தோனேஷியாவுக்கு அனுப்பப்பட்ட இளைஞர் சேவை அலுவலர் செல்வி மகேஸ்வரி செல்லத்துரை எனக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

''இந்தோனேஷியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் பொருளாதார ரீதியில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இந்தோனேஷியாவின் ஏற்றுமதிப் பொருட்களில் தேயிலை, ரப்பர் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. நடை, உடை, பாவனை போன்றவற்றிலும் இந்தோனேஷியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பலத்த ஒற்றுமையைக் காணக்கூடியதாகவிருந்தது.

''குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் கடுமையாக அமுல் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை அங்குள்ள குடும்பங்களில் சராசரி 7 தொடக்கம் 9 வரையிலான பிள்ளைகள் இருப்பதைக் காணக்கூடியதாகவிருந்தது. இலங்கையைப் போன்று இந்தோனேஷியாவில் இலவசக் கல்வி முறை இல்லை. ஆரம்பக் கல்விக்குக் கூட பணம் செலுத்தப்படுகிறது தொழில் நுட்பக் கல்லூரிகள், விவசாயக் கல்வி நிறுவனங்கள் யாவும் பல்கலைக்கழகங்கள் என்றே அழைக்கப்படுகின்றன.

கல்வி கற்கும் மாணவர்கள் ஒய்வு நேரங்களில் தொழில் புரிகின்றனர். சப்பாத்து பொலிஸ் பண்ணுதல், படங்கள் வரைந்து வர்ணம் தீட்டி விற்பனை செய்தல், வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதற்கு உதவி புரிதல். சிறு விற்பனை நடவடிக்கைகள் போன்றவற்றில் மாணவர்கள் ஈடுபட்டுப் பணம் சேகரிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

''வீடுகள் தோறும் விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் பெண்களின் முயற்சியினால் வீட்டுத் தோட்டங்கள் காணப்படுகின்றன ஆடு, மாடு, பன்றி, கோழி, தாரா, வாத்து போன்ற கால் நடை வளர்ப்புகளும் பரவலாகக் காணப்படுகின்றன. பலர் இவற்றினை வியாபார நோக்கத்திற்காகப் பெருமளவில் வளர்க்கின்றனர்.

''குளங்களில் மீன் வளர்க்கும் முயற்சிகளிலும் அதிக ஆர்வம் காட்டப்பட்டு வருகின்றது. பல வீடுகளில் 30, 40 அடி நீள அகலமான நீர் நிலைகளை உருவாக்கி மீன் வளர்க்கப்படுகின்றது. தமது தேவைக்கதிகமான மீனை விற்பனை செய்கின்றனர்.

''விவசாயிகள் தமக்கு எதுவிதமான பிரச்சினைகளும் இல்லை என்று தெரிவித்தனர். அங்கு எல்லோருக்கும் நிலம் கிடைக்கின்றது. விவசாயிகளுக்கான பயிற்சி நெறிகளும் இந்தோனேஷியா அரசால் வழங்கப்படுகின்றது.

''இந்தோனேஷியாவில் பெண்களின் நலன்களைக் கவனிப்பதற்காக தனி அமைச்சு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்வேறு சங்கங்களும் பெண்களினால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்தோனேஷிய பெண்கள் கைவேலைப்பாடுகளில் சிறந்தவர்களாகத் திகழ்கின்றனர்.

## இனந்தெரியாத சடலம் மரணவிசாரணையில் பகிரங்கத் தீர்ப்பு

(புலோலி)

வல்லிபுரக் கோவில் ஆண்டிமடத்தில் அநாதரவாகக் காணப்பட்ட இனந்தெரியாத நபரின் சடலத்தின் மரணவிசாரணையின்போது, பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் பொலிசாரை இம்மரணம் சம்பந்தமாக விசாரணை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வல்லிபுரக் கோவில் ஆண்டிமடத்தில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபரொருவரின் சடலமொன்று காணப்படுவதாகப் பருத்தித்துறைப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்த பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ் திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி சடலத்தை மீட்டது.

பருத்தித்துறைப் பதில் நீதவான் திரு கே. கே. பாலசுப்பிரமணியம் ஸ்தல விசாரணையை மேற்கொண்டார்.

விசாரணையைமேற்கொண்ட பதில் நீதவான் பகிரங்கத் தீர்ப்பு வழங்கி, பொலிசாரைத் தொடர்ந்தும் விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டார். இறந்தவரின் சடலத்தை உரிமை கோர எவரும் முன்வரவில்லை.

## தற்கொலை

(மட்டுவில்)

க. பொ. த. உயர்தர பரீட்சையில் திறமைச் சித்தி எய்த வேண்டுமென விரும்பிய மகளை தாயார் தனியார் கல்வி நிறுவனத்திற்கு கல்வி கற்க செல்வதை அனுமதிக்காததால் மனமுடைந்த மகள் நஞ்சருந்தி மரணமான சம்பவம் ஒன்று நுணாவில் கிழக்கில் இடம் பெற்றது.

வேலுப்பிள்ளை ரஞ்சினிதேவி (வயது 19) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரண விசாரணை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு என் தர்மேந்திரன் முன்னிலையில் நடைபெற்றபோது மரணமானவரின் தாய் சகோதரிமார் ஆகியோர் சாட்சியமளித்துள்ளனர்.

இவர்கள் தமது சாட்சியத்தில் கூறியுள்ளதாவது:

மரணமானவர் கல்வி கற்பதில் அக்கறையுள்ளவர். சம்பவதினம் அவர் தமது சிநேகிதிகளுடன் மட்டுவில் அம்மன் கோவிலுக்குச் சென்றுவிட்டு அங்கிருந்து தனியார் கல்விநிறுவனத்திற்குச் சென்றுவிட்டு வருவதாகக் கூறினார், சிநேகிதிகளுடன் செல்வதை மரணமானவரின் தாயார் கடுமையாக ஆட்சேபித்ததினால் மனமுடைந்த அம்மாணவி நஞ்சருந்தி மரணமானார்.''

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

சாவகச்சேரிப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

## வெளிநாடு செல்வதை தாய்தடுத்தார்; மகள் நஞ்சருந்தித் தற்கொலை

(புலோலி)

மகள் வெளிநாடு செல்வதைத் தாய் தடுக்க முற்பட்டார். அதனால் மகள் கிருமிநாசினி அருந்தி உயிரைமாய்த்துக்கொண்டார். பருத்தித்துறை திகிரியைச் சேர்ந்த ஜெயராணி வேலும்மயிலும் (வயது 21) என்னும் இளம் பெண்ணே இவ்வாறு மரணமானவர்.

இவரது மரணவிசாரணையின் போது இறந்தவரின் தாயார் தங்கமுத்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''இறந்தவர் எனது மகள் அவர் இன்னமும் திருமணம் செய்யவில்லை. படித்துவந்தார். வெளிநாட்டிற்குச் சென்று வேலைபார்க்கவேண்டுமென்ற ஆசை இவருக்கு இருந்தது. ஆனால் நான் அதை விரும்பவில்லை.

''இறந்தவர் தொழிற்திணைக்களத்திற்கூடாக வெளிநாட்டில் பணிப் பெண்ணாக வேலைபார்ப்பதற்கு விண்ணப்பம் செய்திருந்தார். அதற்கு தொழிற்திணைக்களத்திலிருந்து விண்ணப்பப்படிவமொன்று சில நாட்களுக்கு முன்னர் வந்திருந்தது நாங்கள் அதை அவரிடம் கொடுக்கவில்லை. ஆனால் அவர் ஏதாவது கடிதம் வந்ததாவென்று அடிக்கடி கேட்பார். அத்துடன் தன்னுடன் விண்ணப்பித்த பிள்ளைகளுக்கு தொழிற்திணைக்களத்திலிருந்து விண்ணப்பப்படிவம் வந்துவிட்டதாகவும், தனக்குமாத்திரம் வரவில்லையென்றும் கவலைப்பட்டுக் கூறிவந்தார்.

''சம்பவதினம், அவருக்கு வந்த அவ்விண்ணப்பப்படிவத்தைக் கொடுத்தோம், அவ் விண்ணப்பப் பத்திரத்தை வாங்கிப் பார்த்த அவர், தான் மாமி வீடு சென்றுவருவதாகக் கூறிச் சென்றார். நாங்கள் எதுவித சந்தேகமும் கொள்ளவில்லை. சற்று நேரத்தின் பின்னர், இவர் கிருமிநாசினி அருந்திவிட்டதாகத் தகவல் கிடைத்தது. அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்

(7-ம் பக்கம் பார்க்க)

## அன்னதானசபை புதிய தலைவர்

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் புதியதலைவராக திரு வே. க. த. தம்பிமுத்து தெரிவுசெய்யப்பட்டார்.

அன்னதான சபைமண்டபத்தில் உபதலைவர் திரு. வே கந்தையா, தலைமையில் அன்னதானசபையின் பொதுக்கூட்டம் ஆரம்பமானபோது சபையின் தலைவராக இருந்துகாலஞ்சென்ற திரு. சி. க. தம்பையா, ஜே. பி. யின் ஆத்மா சாந்திக்காக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டு அன்னாரின் இருபதாண்டுகால சேவை பற்றி சபைக்காரியதரிசி திரு. க. வே. பரமலிங்கம், மற்றும் தலைவர், தனாதிகாரி, உட்பட பலரும் பாராட்டுக்கள் வழங்கினர். இதனைத் தொடர்ந்து புதியசபைத்தலைவராக திரு. வே. க. த. தம்பிமுத்துவை திரு. வே. சிவப்பிரகாசம் பிரேரிக்க திரு. வே. பரமசாமி அனுவதிக்கச்சபையினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## 'சுந்தர்'! வாழ்க நின் நினைவு



வருடம் ஒன்று — பன்னிரண்டு திங்கள், வேகமான உலகில் மிகக் குறுகிய காலம் தான். எனினும் எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள் ஒன்றை ஒன்று மறைத்துக்கொண்டுவிட்டன. ஆனால் நினைக்கும் போதெல்லாம் இரு வேறு உணர்வுகளைத் தந்துகொண்டிருக்கும் ஒன்று, நேற்று பட்டது போன்று ஆறாத புண்ணாய் நிலைத்து நிற்கிறது.

''சுந்தரலிங்கம் போய் ஒரு ஆண்டு ஆகிவிட்டதா?'' என்ற வினாவே எழுப்பப்படுகிறது. நல்லாசிரியனாய், நண்பனாய், அன்பனாய், கலந்துகொண்ட அத்தனை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டவர்கள் உள்ளம் கவர்ந்த சுந்தரை மறக்க முடியாமை ஒரு மனிதப் பண்பாளன்; வாழ்க மானிடம்! நல்லவர்களை நினைவு கூர்தலும், அஞ்சலி செய்வதும் பழந்தமிழ்ப் பண்பு, அதே நேரம், நெகிழ்விக்கிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற அவரது ஆண்டுத்திதி நாளில் நீள நினைந்து நின்ற அன்பர்கள் கூட்டம் என்றுமே வாழ்த்தி நிற்கும்.

-'நண்பன்'

## மத்திய கல்லூரி ஆசிரியர்கள் மௌனஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் எம். பி, திரு. ஸி. கதிரவேலுப்பிள்ளையின் மறைவை ஒட்டி யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்கள் நேற்று கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு. தா. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இரண்டு நிமிட மௌனஞ்சலி செலுத்தப் பட்டது. (இ)

புங்குடுதீவு கொள்ளை

# 4 குற்றவாளிகளின் முற்குற்றம் பற்றி அறிக்கை வேண்டும்

## ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 98 ஆயிரம் ரூபா கொள்ளை வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நான்கு பேரினதும் கைவிரல் அடையாளங்களைப்பதிவுசெய்து அவர்களது முற்குற்றங்கள் பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் ஊர்காவற்றுறை நீதிபதி உத்தரவிட்டார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு ரி கே எஸ். திலகன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கில் 1ம், 2ம், 4ம், 6ம் எதிரிகள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்த நீதவான் 3ம், 5ம் எதிரிகளை விடுதலைசெய்து தண்டனை விதிப்பதை அடுத்த மாதம் 14ம் திகதிக்கு ஒத்தி வைத்தது தெரிந்ததே.

இவ் வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு ரி கே. எஸ் திலகன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிகள் தரப்புச்சட்டத்தரணிகள் தொகுப்புரை நிகழ்த்தினர். 2ம், 6ம் எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு பி. கைலாசநாதனும் 1ம், 3ம் எதிரிகளின் சார்பில ஆஜரான சட்டத்தரணி இவ்வழக்கில் புங்குடுதீவு இறுப்பிட்டியில் முத்துவேலு சிவக்கொழுந்து என்னும் மூதாட்டியின் வீட்டில் கொள்ளையடிக்கும்நோக்குடன் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், பயங்கர ஆயுதங்கள் தாங்கி 98,000 ரூபா பெறுமதியான நகைகள் வெள்ளிப்பாத்திரங்கள், மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்ததாகவும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாகவும் நெடுந்தீவு புங்குடுதீவு பகுதிகளைச் சேர்ந்த செல்லன் இராஜரத்தினம், செல்லன் சதாசிவம், சின்னத்தம்பி செல்வராஜா, வெள்ளையன் பாலசிங்கம், சின்னத்தம்பி அல்லது தங்கராசா, கணேசமூர்த்தி, அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம், வெள்ளையான் குணசிங்கம் ஆகிய எண்மர் மீதும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது இவர்களில் எட்டாம் எதிரி ஏற்கனவே களவுப் பொருட்களை வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது விசாரணை நடுவில் சாட்சியம் போதாமையால் 7ம் எதிரி விடுதலைசெய்யப்பட்டார். 5ம் எதிரி இதுவரை பொலிசாரால் கைதுசெய்யப்படாமையால் அவர் இல்லாமலே அவருக்கு எதிராகவும் விசாரணை நடாத்தப்பெற்றது. 4ம் எதிரி விளக்கமறியலில் இருந்து தப்பிஓடிவிட்டதால், தொடர்ந்தும் அவருக்கு எதிராகவும் விசாரணை நடைபெற்றது. 1ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீகாந்தாவும் 7ம எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆர். சபேசனும், கைதுசெய்யப்படாத 4ம், 5ம் எதிரிகள் தவிர்ந்த ஏனையோரின் சார்பில் சட்டத்தரணி பி. கைலாசநாதனும் ஆஜராகியிருந்தனர். பொலிஸ் தரப்பில் ஊர்காவற்றுறை பொலிசாரின் அனுசரணையுடன் சட்டத்தரணி கே. வி. நவரத்தினம் வழக்கை நடத்தினார். (இ)

சில தினங்கள் மட்டும்
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திசைமாறிய பறவைகள்
— மகளிர்க்கு மிக ஏற்ற சித்திரம் —

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
நடித்த
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
மன்னவன்
வந்தானடி

லிடோ
(யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-45,
7-15 & 9-45
JON VOIGHT :
FAYE DUNAWAY in
THE CHAMP


ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
4-வது ஜுவாலை வீசும் வாரமாக,
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி.ப.2-00,
6-00, 9-30
சிவகுமார் - ஜெய்சித்ரா
சொல்லத்தான் நினைக்கிறேன்

10-ந் திகதி முதல் புத்தாண்டு வெளியீடு!
சிவாஜி - கே. ஆர். விஜயா
ரிஷி மூலம்

ராஜா யாழ்ப்பாணம் சாந்தி மட்டுநகர்
தினசரி 4 காட்சிகள் தினசரி: 1-30, 5-00, 9-30



● பாக்கியராஜ் ● ரதி ● சதிஸ்ரீ
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்; பாரதிராஜா இசை: இளையராஜா

## வயாவிளானில் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(பலாலி)

வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் அமரர் செல்லப்பா குமாரசாமி ஞாபகார்த்தக் கேடயத்திற்கான வருடாந்த கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியை இம்மாதக் கடைசிவாரத்தில் நடாத்தவிருக்கிறது. நிலையமைதானத்தில் நடைபெறவிருக்கும் இச்சுற்றுப்போட்டிகள் இம்முறை குறுகியகாலத்தில் முடிவடையக்கூடியதான அமைப்பைக் கொண்டதாகவிருக்கும்.

செற்-அப்போட்டி, 6 வீரர் ஓவர் கேம், 4 வீரர் ஓவர்கேம் என மூன்று பிரிவுகளாக நடாத்தி தனித்தனி சாம்பியன்கள் தெரிவுசெய்யப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவிருக்கும் இப் போட்டிகள் நொக்கவுட்முறையில் நடத்தப்படுவதுடன் ஒரு கோஷ்டி ஒரே நாளில் மூன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் கலந்துகொள்ளவும் வழிசெய்யப்படும். கழகங்களின் போக்குவரத்துச் செலவுகள், நேரஅவகாசம்என்பவற்றைக்கருத்தில்கொண்டே இந்த ஏற்பாடுசெய்யப்பட்டுளது. மின்வெட்டு அமலில் இருப்பதினால் இரவுநேரப் போட்டிகள் இம்முறை நடைபெறமாட்டாது.

சென்ற வருடத்திய சுற்றுப் போட்டியில் செற்-அப்போட்டிக்கான சாம்பியன் கேடயத்தை அச்சுவேலி ஸ்ரீவிக்கினேஸ்வரா கழகமும், 6 வீரர் ஓவர்-கேம் போட்டிக்கான சாம்பியன் கேடயத்தை வட பிராந்திய போக்கு வரத்துச் சபையின் யாழ். சாலைக் கழகமும், 4 வீரர் போட்டிக்கான கேடயத்தை திருநெல்வேலி சிவன் கழகமும் சுவீகரித்துக் கொண்டன. சென்ற வருடம் 144 கோஷ்டிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உ. அ. அதிபர் பிரிவு விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

விளையாட்டமைச்சின் ஆதரவின் கீழ் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் நல்லூர் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு.கே.சபாபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ்.சண்முகசுந்தரம் கலந்து கொண்டார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி சண்முகசுந்தரம் பரிசில்களை வழங்கினார். விழாவின் சிறப்பம்சமாகபோட்டி இறுதியில் நடைபெற்ற கிராமசேவை அலுவலர்களுக்கான வால் கட்டும் போட்டி பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது. (இ)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
பணத்தோட்டம்
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—சுஜாதா
தீபம்
(புதிய பிரதி-ஈஸ்மன் கலர்)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
மகத்தான 2-வது வாரம்
ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன்:331 (கலர்)

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 22-ம் திகதி
சனிக்கிழமை
(4-4-81)

மேடம்; துன்பத்தின் ரேகைகள் படரும் எதிலும் தயக்கம் ஏற்படும். ஆதரவு கொடுத்தவரே முடிவில் கையை விரிக்கக்கூடும். கடன் தொல்லை அதிகரிக்கலாம் நிதானம் வேண்டும்.

இடபம்: உறவு முறைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. அபிப்பிராய பேதங்கள் மறைவதற்கு இடமுண்டு. பயன் உள்ள கடிதமொன்று இன்று உங்களுக்கே கிடைக்கலாம்.

மிதுனம்: நிதியில் அபிவிருத்தி தென்படுகின்றது பூர்வீகச்சொத்து ஒன்று உமக்குக் கிடைக்கலாம். மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர், உடல் நிலையில் அபிவிருத்தி தென்படும்.

கடகம்; பேராசையின் மூலம் குறுக்கு வழியை நாடுவீர்கள் இதனால் விபரீதங்கள் விளையக்கூடும். மறைமுக எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம் முன் எச்சரிக்கை நன்று.

சிங்கம்; பொறியியலாளர்களுக்கு பொன்னான தினம். புகழும் பொருளும் குவிவதற்கான சந்தர்ப்பம் உண்டு. பொதுவாக தொழில் வெற்றி உண்டு.

கன்னி; உள்ளம் உவகையால் துள்ளும் உறவு முறைகளில் இறுக்கம் ஏற்படும். முதியவர் ஒருவரின் தொடர்பு உங்களுக்கு புதுப்பாதையைக் காட்டும். அறவழியில் நாட்டத்திற்கும் இடமுண்டு.

துலாம்; தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்துக்கும் இடம் ஏற்படலாம் ஆயுதங்களுடன் பழகுவர்களுக்கு அவதானம் வேண்டும்.

விருச்சிகம்; தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் களவுநிரவழியில் பொருள் வரவுக்கு இடமுண்டு கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் புதிய நண்பர்கள் சேருவார்கள்.

தனு; செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும்.

நண்பர்களின் தொல்லைகளினால் நஷ்டமடைவீர்கள் தொழில் புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

மகரம்: இரக்கசிந்தை மேலோங்கும் பிறருக்கு உதவுவதால் பெரும் மகிழ்ச்சியடைவீர்கள் முன்னாள் ஆசிரியர் ஒருவரின் சிபார்சுக்கடிதம் நல்ல பலனை அளிக்க முடியும் பொதுவாகத் தரமான தினம்.

கும்பம்: தங்கக்குணம் மேலிடும் தக்கமதிப்பும் கிடைக்கும் இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும் உழைப்பினால் பலனும் உற்சாகமும் பிறக்கும் முன்னேற்றமான தினம்.

மீனம்: இலக்கிய ரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும் கலைஞர்கள் போற்றப்படுவார்கள் சிலருக்கு வெளிநாடு செல்வதற்கு சந்தர்ப்பமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## வருடாந்தப்போட்டி

(புளியங்குளம்)

வவனியா வடக்கு நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிராமசேவை உத்தியோகத்தர்கள் பிரிவுகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை 4ம் திகதி கனகராயன்குளம் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

## ஆவரங்காலில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆவரங்காலில் சரஸ்வதிசன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடாத்தும் பரராசசிங்கம் ஞாபகார்த்த 3 வது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் புத்தூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வி.கழகம், உதய சூரியன் வி.கழகத்தை 3-1 கோல்களால் வெற்றி பெற்றது. இப் போட்டிக்கு மத்தியஸ்தரான திரு சி.திரவியநாயகம் கடமையாற்றினார்.

அடுத்த போட்டி இம் மாதம் 6ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ச-ஸ்)

## வெளிநாடு...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றேம். அவர் அங்கு இறந்துவிட்டார்."

சாட்சிகளைத் தொடர்ந்து பருத்தித்துறை பதில் நீதவான் திரு. கே. கே. பாலசுப்பிரமணியம் தீர்ப்பளித்தார் எனத் தீர்ப்பளித்தார்.

## வடமாகாண பாட்மின்ரன் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாட்மின்ரன் சங்கம் நடாத்தும் வருடாந்தப் போட்டிகள் யாழ். 'லயன்ஸ் கிளப்' ஆதரவில் வண்ணார்பண்ணை 'கில்னர்' மண்டபத்தில் இம்மாதம் 9 ம் திகதி முதல் 13-ம் திகதிவரை நடைபெறும்.

ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் பரியோவான் கல்லூரியைச் சேர்ந்த யாழ். பாட்மின்ரன் வீர முதல்வரான (1980) எஸ்.சிவநாயகம் யாழ். வை. எம். சி. ஏ. சாம்பியன் வி. ஜெயபாலன், யாழ். இந்துக்கல்லூரி வி. ரகுமார், பி. கனகரட்னம், பி. நந்தகுமார், எம். விசாகன், வால் சாமுவேல் ஆகியோர் கலந்து கொள்வர்.

யாழ். பாட்மின்ரன் வீராங்கனை (1980) சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நிர்மலா சாமுவேல் மற்றும் ச. ஜெரீன் (திருக் கன்னியர் மடம்), சாமுவேல் சகோதரிகளான சியாமளா, சசிகலா, சுந்தரலிங்கம் சகோதரிகள் ருக்ஷினி, சிறீ நஞ்சினி, வாசுகி வேலாயுதம், தஞ்சா சோதிராசா, சுகேந்திரினி நடராசா ஆகியோரும் இதில் கலந்துகொள்வர். இதற்கான ஏற்பாடுகளை மேற்படி சங்கச் செயலாளர் திரு கனகராஜா கவனித்து வருகிறார். (க)

## ஆசிரியர்குழு வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கும் மாணவ தலைவர்களுக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர் கிரிக்கட் போட்டியில் ஆசிரியர்குழு வெற்றிபெற்றது.

ஆசிரியர்கள் குழு 20 ஓவர்களில் 8 விக்கட் நஷ்டத்திற்கு 130 ஓட்டங்களைப் பெற்றது. மாணவர் குழு 23 ஓவர்களில் 9 விக்கட் நஷ்டத்திற்கு 83 ஓட்டங்களைப் பெற்றது (இ)

## அ. செ. மு. நிதி

எழுத்தாளர் அ. செ. முருகானந்தம் நிதிக்கு இதுவரை சேர்ந்துள்ள தொகையின் விபரம் வருமாறு:

1. ஆர். ஆர். பூபாலசிங்கம் யாழ்ப்பாணம் ரூ 251-00
2. 'ஈழநாடு' ஸ்தாபனம் யாழ்ப்பாணம். ரூ 251-00
3. சந்த தர்மலிங்கம் கோண்டாவில் ரூ. 15-00
4. ந. சிவபாதம் ஆனைக்கோட்டை. ரூ. 100-00

சைனுவில் இருந்து
இறக்குமதி செய் ப்பட்ட
(SINGLE PHASE)

¾ H.P. 2900 R.P.M.
1 H P 2900 R P.M. மோட்டர்கள்
1,5 H P 29 0R.P.M

தனியாகவும், பம்புடனும் விற்பனைக்கு உண்டு.

K. R. சிவலோகநாதன் & Co,
No 6, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம்.
T. P 8289 8759

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

## வால் இல்லாக் கன்று

(சுழிபுரம்)

சுழிபுரம்-நெல்லியான் கிராமத்தில் ஒரு சுவலில்லா கன்று ஒன்றை ஈன்றுள்ளது. திரு.எஸ். வெற்றிவேலு என்பவருக்குச் சொந்தமான இப்பசுவையும் கன்றையும் பலர் சென்று பார்வையிட்டுவருகின்றனர். கன்றும் தாயும் ஆரோக்கியத்துடன் உணவு உட்கொள்கின்றன. (இ)

## காணி விற்பனை

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில், சிவலிங்கப் புளியடி வீதியில் குடியிருப்பதற்கு ஏற்ற ஒன்றரைப் (1 1/2) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

விபரங்கட்கு:
ந சுந்தரம்பிள்ளை.
30, சடைச்சமி வீதி.
நீராவியடி, யாழ்ப்பணம். 8789

தாய்லாந்தில் எதிர்ப் புரட்சி

# பிரதமர் ஆதரவுபடையிடம் மீண்டும் ஆட்சி பீடம்!

பாங்கொக், ஏப். 3

தாய்லாந்தில் கடந்த மூன்று தினங்களுக்குமுன்னர் இராணுவத்தினரால மேற்கொள்ளப்பட்ட திடீர்ப்புரட்சிக்குப் பின்னர் மீண்டும் பிரதமமந்திரி திரு. பிறேம் ரின் சுலானந்தாவின் ஆதரவுப்படையினர் நாடு முழுவதையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இப்படையினர் தாய்லாந்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், வானொலி நிலையத்தையும் இன்று அதிகாலை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளனர்.

இத்திடீர்ப் புரட்சிக்குக் காரணமாகவிருந்த ஜெனரல் சாண்ட் பிரட்றிமாவும் அவரின் நெருங்கிய ஆதரவாளர்களும் நாட்டைவிட்டு ஓடி பர்மாவில் சரணடைந்துள்ளதாக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஜெனரல் சாண்ட் பிரட்றிமா கைதுசெய்யப்பட்டுள்ளதாக இன்னோர் அறிக்கை தெரிவிக்கின்றது.

தாய்லாந்து பிரதமமந்திரி பிறேம் ரின் சுலானந்தாவின் ஆதரவுப்படைகளுக்கும், திடீர் புரட்சியை மேற்கொண்ட இராணுவத்தினருக்குமிடையே இன்று காலை இடம்பெற்ற மோதலில் எவ்விதசேதமும்ஏற்படவில்லையென்று அறிவிக்கப்பட்டது. (வெ)

## 'இலட்சியபுருஷர்'

(யாழ்ப்பாணம்)

"இலட்சியத்துக்காக வாழ்ந்து தமிழர்களுடைய வாழ்வின் முன்னேற்றத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த இலட்சிய புருஷர் கோப்பாய் எம்.பி திரு.கதிரவேலுப்பிள்ளை, இவருடைய இழப்பு தமிழ் மக்களுக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

வட்டுக்கோட்டை எம் பி. திரு.தா.திருநாவுக்கரசு விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தமிழ் மக்களுடைய இக்கட்டான காலகட்டத்தில் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்துள்ளார். அவர் எந்தச்சந்தர்ப்பத்திலும் கொள்கையைவிட்டுக் கொடுக்காத கொள்கைவாதியாகவும் திகழ்ந்திருக்கிறார்" என்றும் அவர் தனது செய்தியில் தெரிவுத்துள்ளார். (சி-கு)

## சிறுவர்கள் ஏமாற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபையினரால் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவில் சிறுவர்கள் விளையாடுகின்ற உபகரணங்கள் யாவும் உடைந்து, சிதைந்து காணப்படுவதால் பூங்காவுக்குவரும் சிறுவர்கள் ஏமாற்றத்திற்குள்ளாகின்றனர்.

உபகரணங்கள் யாவும் உடைந்திருப்பதால் அதில் விளையாடும் சிறுவர்கள் காயமடையும் நிலைக்குள்ளாகின்றனர். (அ)

ப. நோ. கூ. சங்க

## பணத்தை கையேற்குமாறு மக்கள் வங்கியை பணிக்கவும்'

### ஜனாதிபதியிடம் தந்திமூலம் கோரிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் வைப்புப்பணத்தை பொறுப்பேற்கும்படி ஊர்காவற்றுறை மக்கள் வங்கியைப் பணிக்குமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் சங்கம் தந்திமூலம் கேட்டுள்ளது.

சங்கத்தலைவர் சட்டத்தரணி மு. சண்முகநாதனும், பணிப்பாளர் சபையும ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள தந்தியில் சங்கத்தின் வைப்புப்பணத்தை ஊர்காவற்றுறை மக்கள் வங்கி பொறுப்பேற்க மறுப்பதாகவும் இதனால் பாவனையாளர்கள் பாதிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சங்கத்தலைவர் திரு மு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற விசேட நெறியாளர் குழுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

"மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்ட பொழுது இலகுவில்கடன் வசதி செய்து கொடுப்பதென்றும் சிறந்த சேவை அளிப்பதென்றும் வாக்குறுதி அளித்ததன் பேரில் அதுவரை இயங்கி வந்த கூட்டுறவு வங்கிகள், மக்கள் வங்கியுடன் இணைந்தன. சமீபகாலமாக மக்கள் வங்கி கூட்டுறவுச் சங்கங்களுடன் நடந்துகொள்வது மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது"

"சங்கம் ஏற்ற மாற்று ஒழுங்குகள் செய்யும் வரைக்கும் ஊர்காவற்றுறை மக்கள் வங்கி தொடர்ந்தும் எமக்கு வழங்கி வந்த சலுகைகளைத் தரவேண்டும்". (கு)

## புடவை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது:

உள்ளூரில் புடவைஉற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளதால் அடுத்தாண்டில் புடவை இறக்குமதிக்கு எதுவித அவசியமும்ஏற்படாது என்று அரசு கருதுகிறது.

உள்நாட்டில் இப்போது தரமான புடவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உள்ளூர் நெசவுத்தொழிலைப் பாதுகாப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து புடவைகளை அன்பளிப்பாக அனுப்புவதைக் கட்டுப்படுத்தவும் அரசு முடிவு முடிவு செய்துள்ளது. (இ)

## 'நஞ்சுகுடிப்பேன்' எனக் கூறிவந்த யுவதி நஞ்சுக்குப் பலி

(மன்னார்)

நஞ்சு குடிப்பேன் நஞ்சு குடிப்பேன் எனப்பலநாட்கள் சொல்லி வந்த பிடிவாதக்காரப் கன்னிப் பெண் இறுதியில் நஞ்சுகுடித்து தற்கொலை செய்து கொண்டார்.

பேசாலை, சங்கீதம் வாடி 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த செபஸ்தியான் அந்தோனிக்கம் (வயது 19) என்ற யுவதியே இப்படி மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பாக நடைபெற்ற விசாரணையின் போது இறந்தவரின் தந்தை சாட்சியமளிக்கையில் பிடிவாதக்காரியான இறந்த மகள் தனது அக்காவுடன் அடிக்கடி வாய்ச்சண்டை பிடித்துவந்தாகவும் நஞ்சு குடித்துச்சாவேன் என்று சொல்லிவந்தாரென்றும் அதேபோல் சம்பவதினமன்றுஅக்காவுடன் சண்டைபிடித்துவிட்டு இறுதியில் நஞ்சு குடித்தார் என்றும் இவரைக் காப்பாற்றும்நோக்கத்தோடு மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்குக்கொண்டு போயும் காப்பாற்றமுடியவில்லை என்றும் கூறினார்.

இவரது மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி ஜனாப் எஸ். எம். எம். எம் ஆலம் நஞ்சு குடித்ததால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார். (அ)

## வெங்காயம், உருளைக்கிழங்கு இறக்குமதி இல்லை

### புது வருடத்திற்கு 500 தொன் பம்பாய் வெங்காயம

(கொழும்பு)

புதுவருடத்தை முன்னிட்டு 500 தொன் பம்பாய் வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம் உள்ளூரில் சின்னவெங்காயமும், உருளைக்கிழங்கும் போதியளவு கையிருப்பில் உள்ளதனால் இவை இறக்குமதி செய்யப்படவில்லை.

இத்தகவலை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத் தலைவர் ஜனாப் ஆர். சறூக் கூறினார்.

அதேசமயம் புதுவருடத்தை முன்னிட்டு கூட்டுறவுமொத்த ஸ்தாபனம் சகல பொருட்களையும்5 வீதம் விலைகுறைத்து விற்பனைசெய்யத் தீர்மானித்துள்ளது.

இம்மாதம் 5-ம் திகதிமுதல் 11-ம் திகதி வரை விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு இந்த 5 வீதக் கழிவு வழங்கப்படுமென்று கூட்டுறவுமொத்த விற்பனவு ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

## வரட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படும்.

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அமைய சமூக சேவைப்பகுதி வரட்சி நிவாரண நிதியை வழங்கும்,

வரட்சியால் பாதிக்கப்பட்ட 5 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு மாதாந்தம் 105 ரூபாவும், 14 உறுப்பினர் கொண்ட குடும்பத்திற்கு மாதம் 180 ரூபாவும் வழங்கப்படும். இத்துடன் உலக உணவுத் திட்டப்பிரிவின் உதவியையும் அரசு பெற்றுக் கொடுக்கும். (இ)

## ரூ. 21,000

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

சைக்கிளில் இருவர் வந்து கொண்டிருந்தபோது, சந்தேகத்தின் மீது பொலிஸார் இவர்களைத் தடுத்து சோதனையிட்ட சமயம் இவர்களிருவரிடமும் 21,000 ரூபா பெறுமதியான அபின் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் இது சம்பந்தமாக சைக்கிளில் பிரயாணம் செய்த ரி. லோகநாதன், பி சிறீதரன் ஆகியோர் யாழ் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் யாழ் பிரதம தபாலகத்துக்கு முன்பாக சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே, பொலிஸார் இவர்களைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமானவிசாரணை நடைபெற்றதைத் தொடர்ந்து ரி. லோகநாதனுக்கு 5000ரூபா அபராதமும், பி. சிறிதரனுக்கு :000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டு, சுமார் ஏழு றாத்தல் எடையுள்ள அபினும்பறிமுதல் செய்யப்பட்டது.

## மருத்துவ இந்து மாமன்றம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவ நிறுவனத்தின் இந்துமாமன்றத்தின் புதிய நிர்வாகக்குழு மன்றத்தின் காப்பாளர்கள் தலைமையில் தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்: செல்வி இ. புஷ்பலீலா, உபதலைவர்: திரு பி. பாலசுப்பிரமணியம், செயலாளர்: திரு மு. குணாளன், உட-செயலாளர்: திரு. ந. ஜெயக்குமார், இணைப் பொருளாளர்; செல்வி க பத்மராணி; திரு எஸ். உதயக்குமார், பத்திராதிபர்; செல்வி இ. தாமரைச்செல்வி, கணக்குப் பரிசோதகர்; டாக்டர் விஜயேந்திரன், திரு. கிருஷ்ணபிள்ளை நிர்வாகக்குழு உறுப்பினர்களாக திரு. எஸ் சபாநாதன், செல்வி தி. அழகேஸ்வரி, திரு. அற்புதராசா, திரு எஸ். சிவராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (பலாலி. நி)

கடன் சுமை:

## 6 பிள்ளைகளின் தந்தை தற்கொலை

(பச்சிலைப்பள்ளி)

ஐந்து பெண் பிள்ளைகளின் தந்தை கடன் தொல்லை தாங்க முடியாது நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பளையிலுள்ள தம்பாகம்னனுமிடத்தைச் சேர்ந்த எம். நடராசா அல்லது சிவகுரு (வயது42) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவார்.

இவரது மரணவிசாரணையை மரண விசாரணை அதிகாரி திரு தர்மேந்திரன்நடத்தினார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இறந்தவர் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ. சங்கத்தில் கடமை ஆற்றி வந்தார். இவருடைய 6 பிள்ளைகளில் 5 பேர் பெண்களாவர். கடந்த காலத்தில் கடன் பளுவினால் மிகக் கஷ்டமடைந்துவந்தார். இவ்விபரம் மரண விசாரணையில் தெரிய வந்தது இறந்தவரால் எழுதப்பட்ட கடிதமொன்றும் மரண விசாரணையின் போது சமர்ப்பிக்கப் பட்டது

பளைப் பொலிஸ் உத்தியோகத்தர் திரு கே. தங்கவடிவேல் சாட்சியங்களை ஆஜர் செய்தார். (அ)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. QB [illegible] The Eelanaadu P. B. No. 49, Telegrams "Eelanaadu" Phone: 589 : 8129